மதுரகவி
நப்பின்னைப் பிராட்டியார்
திருமணம்

மதுரகவி
நப்பின்னைப் பிராட்டியார்
திருமணம்

# முன்னுரை

தொன்று தொட்டு நம் பாரதப் பண்பாட்டின் பாலமாகப் பல மொழிகள் பேசும் மக்களிடையே இலங்குவது இராமாயணமும், பாரதமும், பாகவதமும் ஆகும். இராமாயணம் வான்மீகி பகவானாலும், பாரதமும், பாகவதமும் வேதவியாச பகவானாலும் இயற்றப் பெற்றவை. வரலாற்றடிப்படையில் ஆக்கம் பெற்றமையால் இவை இதிகாசம் எனக் கூறப்பெற்றன. காலத்தால் பழமையான செய்திகளைக் கூறுவது புராணம், பாகவதம். இவ்விரண்டு வகையிலும் சேர்க்கப்பெற்ற புராணபாகவதம், இதிகாச பாகவதம் என வழங்கப் பெறுகின்றது.

இராமாயணம், பாரதம், பாகவதம் ஆகிய நூல்கள் இறைவன் திருவவதாரம், அருளிச் செயல்களைக் கூறுவதாக அமைந்துள்ளன. ஆயின் அவ்விதிகாசத் தலைவர்கள் அவதாரம் செய்தமையும், அருளிச்செயல் புரிந்தமையும் வடநாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளாகப் பெரும்பாலும் கூறப்பெற்று, அங்கு வழங்கிய சம்ஸ்கிருத மொழியிலேயே ஆக்கம் பெற்றுள்ளன. இவ்வாறு பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன் தோன்றிய பாகவதம் நாடெங்கும் புனித நூலாகக் கருதப் பெற்றது. பகவான் கதையே பாகவதம் எனப் பெற்றமையால் இன்றும் குஜராத்தில் பாகவத நூலையே பகவானாகக் கருதிப் போற்றி வருகின்றனர். பாகவதம் பட்டி தொட்டிகளில் எல்லாம் உரைக்கப் பெற்று மக்களிடை இறையுணர்வை நிலை நிறுத்தும் சாதனமாகப் பயன்படுத்தப் பெற்றது. இதனாலேயே பாகவதம், பாரதம், இராமாயணம் பிரசங்கம் புரிவோர் பாகவதர் என அழைக்கப் பெற்றனர் போலும்.

பாரத நாட்டின் தென்பகுதியாகிய தமிழ் நாட்டில் பேசப் படும் தமிழ்மொழி, சம்ஸ்கிருதம் போலத் தொன்மையான மொழி யாகும். மேலும் தமிழ் மொழி பிற மொழிகள் பெறாத பொருள் இலக்கணம் அமைந்த சிறப்புள்ள மொழியாகும். இதுவரைகிடைத் துள்ள நூல்களில் பழமையான தமிழ் நூல் தொல்காப்பியம் என்ற பழந்தமிழ் இலக்கண நூலாகும். இந்நூல் தோன்றிய காலம் இன்னும் சரியாக வரையறுக்கப் பெறவில்லை. எனினும் இந்நூல் மிகப் பழமையானது என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லை. தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் நாடு நான்கு நிலங்களாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப்பெறும். ஒவ்வொரு வகை நிலத்தின்

தன்மை, கடவுள், மக்கள், தொழில் பற்றி அதில் வரையறுக்கப் பெற்றுளது.

1) குறிஞ்சி :- மலையும் மலைசார்ந்த இடமும் ஆகும். அதன் கடவுள் முருகன். மக்கள் வேட்டுவர். தொழில், வேட்டையாடுதல்.

2) முல்லை :- காடும் காடுசார்ந்த இடமும் ஆகும். கடவுள் திருமால், மக்கள்-ஆயர் ஆய்ச்சியர், தொழில் ஆநிரைமேய்த்தல்.

3) மருதம் :- வயலும் வயல்சார்ந்த இடமும் ஆகும். கடவுள் இந்திரன், மக்கள்-உழவர் உழத்தியர், தொழில்-பயிர்த்தொழில்.

4) நெய்தல் :- கடலும் கடல்சார்ந்த இடமும் ஆகும். கடவுள் வருணன். மக்கள், பரவர். தொழில், மீன்பிடித்தல். இவ்விதம் வரையறுக்கப் பெற்றமையால் மிகப் பண்டைய காலத்திலேயே திருமால் தமிழகக் கடவுளாகப் போற்றப் பெற்றமை அறியப் படுகின்றது. எனவே திருமால் கதையாம் பாகவதம் நீண்ட காலமாகவே தமிழ் மக்கள் மனதில் அழுத்தமாகப் பதிந்துள்ளது. வடமொழியிற் காணாத சில கதைகளும், தமிழ்நாட்டில் வழங்கப் பெற்று வருகின்றன. அவை சங்க இலக்கியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் குறிப்பாக உணர்த்தப் பெற்றுள்ளன. மேலும் முன்பு கல்வி அறிவு குறைந்த சதவீதமே இருந்தபடியால் இவ்விலக்கியங்களைச் சிறுபான்மையினரே உணர முடிந்தது. ஆனால் கல்வியறிவில்லாத பெரும்பான்மை மக்களும் உணர்ந்து கொள்ளுவதற்கேற்றவகையில் நாட்டுப்புறப் பாடல்களிலும் பிரசங்கம் மூலமும் இக்கதைகள் வழங்கி வருகின்றன. உதாரணமாக இரு செய்திகளைக் காணலாம் (1) எலிக்கதை (2) நப்பின்னை வரலாறு.

1) எலிக்கதை :- ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த சைவ சமயக் குரவர்களில் ஒருவராம் திருநாவுக்கரசு சுவாமிகள் தம் தேவாரம் திருக்குறுக்கைத் திரு நேரிசையில்

> நிறைமறைக் காடுதன்னில் நீண்டெரி தீபம் தன்னைக்
> கறை நிறுத்து எலி தன் மூக்குச் சுட்டிடக் கன்று தூண்ட
> நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவான் உலகம் எல்லாம்
> குறைவு அறக் கொடுப்பர் போலும் குறுக்கைவீ ரட்டனாரே
>
> (IV-49-8)

என அருளியுள்ளார். வேதாரணியம் கோவிலில் இறைவன் திருமுன்பில் எரிந்த தீபத்தின் நெய்யை உண்ண வந்த சுரிய எலியின் மூக்கைத் தீபச் சுடர் சுட்டிட, எலிதன் மூக்கை நிமிர்த்த அதனால் திரி தூண்டப்பெற்று, தீபம் ஒளிமிக, இறைவன் சந்நிதி

A ③



யில் நெய்விளக்கு ஒளிமிகச் செய்தமைக்காக அவ்வெலியை மூவுலகும் ஆள இறைவன் அருளியதாகக் கூறப்பெற்றுளது. இக் கதையை நாட்டுப்புறப் பாடல்களும் வேதாரணிய புராணமும் பாரத மாவிந்தமும் கூறுகின்றன. இம் மாவெலிச் சக்கரவர்த்தியே பாகவதத்தில் மபெலியாகி, மகாபலியாக மாறியுள்ளார். மாவெலிச் சக்கரவர்த்தியின் அகங்காரத்தை அடக்கி, அவன் தலைமீது திருவடிவைத்துத் திருமால் அருளியது ஆவணி (சிங்கம்) மாதத் திருவோண நன்னாளாகும். எனவே அந்நாளை மாவெலிச் சக்கரவர்த்தி நினைவாகக் கேரளத்தில் மக்கள் இன்றும் சிறப்பாக விழா எடுக்கின்றனர். மாவெலியின் நினைவாகவே இன்றும் அரசு நியாயவிலைப் பண்டகசாலை 'மாவேலி' என வழங்கப் பெறுகின்றது. பண்டையகால வரிவடிவில் எகர, ஏகார வேற்றுமையின்றிக் குறிலும், நெடிலும் குறிலாகவே வழங்கப்பெறும், எனவே மாவெலி மாவேலியாயிற்று. இன்று கூட மாவேலிக்கரை என ஒரு ஊர் காயங்குளத்தை அடுத்து உள்ளது. மவெலிக்கரையே, மாவேலிக்கரை என மருவி இருக்கலாம். ஆனால் பாகவதத்தில் இச்செய்தி கூறப்பெறவில்லை.

தமிழில் சங்க இலக்கியங்கள் (இருண்ட காலத்தில்) மறைந்து பின் 9 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பெற்றது போல, வட மொழிப் பாகவதமும் பிற்காலத்தில் தொகுக்கப் பெற்ற போது, தொகுத்தவர்கள் தமிழ்நாட்டில் வழங்கிய பாகவதத்தைக் கவனிக்கவில்லையோ எனக் கருதவேண்டியுள்ளது. பல ஆராய்ச்சியாளர்களும் பாகவதமும் 10 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப் பெற்றதாகவே கூறுகின்றனர்.

2) நப்பின்னை :- இவ்வாறு தொகுக்கப் பெற்ற பாகவதம் சம்ஸ்கிருதத்தில் 7 நூல்களாக விரிந்துள்ளது. 1 இதிகாசபாகவதம் 2 புராணபாகவதம், 3, சம்மிதாபாகவதம், 4 உபசம்மிதா பாகவதம், 5 விஷ்ணுரகசியபாகவதம் 5 விஷ்ணுயாமள பாகவதம் 7 சௌநசம்மிதா பாகவதம் என்பனவாம். இவற்றுள் இதிகாச பாகவதமும், புராண பாகவதமும் தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. இதிகாச பாகவதம் செவ்வைச்சூடுவார் என்பவராலும், புராணபாகவதம் நெல்லிநகர் அருளாளதாசர். என்னும் மதுரகவி வரதராஜ ஐயங்காராலும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. இதில் அருளாளதாசர் நப்பின்னை திருமணப்படலம் என ஒருபடலம் சம்ஸ்கிருத பாகவதத்தில் இல்லாத செய்தியைக் கூறுகிறார். மேலும் பாகவதத்தில் காணாத, ததிபாண்டன் கதையும், மோகினி அவதாரம் என்ற படலமும் கூறப்பெற்றுள்ளன.

XII

அருளானதாசர் வடமொழியன்றித் தமிழிலும் சிறந்த பயிற்சியுடையவர். மேலும் ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களை அழுத்தமாகப் பயின்றவர். எனவே ஆழ்வார்கள் போற்றும் நப்பின்னையைக் கண்ணன் திருமணம் செய்த நிகழ்ச்சியைத் தம் நூலில் சேர்த்துள்ளார்.

தமிழகத்தில் முல்லைநிலத்துக்குரிய கடவுள் திருமால் என்பதும், மக்கள் ஆயர் என்பதையும் முன்னரே கண்டோம். ஆயர் குலத்தில் திருமால் வளர்ந்த செய்தி பாகவதத்திலும் கூறப் பெற்றுள்ளது. திருமாலை மாயோன் எனத் தொன்மைக்கால முதல் வழங்கப் பெற்றுவரும் செய்தி, தொல்காப்பியத்திலன்றிப் பரிபாடலிலும் கூறப்பெறுகின்றது.

''மாஅயோயே மாஅயோயே
மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடி
மணிதிகழ் உருபின் மா அயோயே'' பரி.3

இதனால் நீலமணியின் நிறத்தை ஒத்த திருமேனியினன் மாயோன் என்பதும், அவன் திருவடி மறுபிறப்பறுக்கும் என்பதும் புலனாகின்றன. மாயோன் மாநிறம் உடையோன் என்பது மாயோன் என்பதன் பொருளாகும். இங்கு மா என்பது கருமையைக் குறிக்கும். இதனால் திருமால் கார்வண்ணன் எனக் கருதப் பெற்றமை தெரியவரும்.

சிலப்பதிகாரத்திலும் இளங்கோ அடிகள் திருமாலைக் கரியவன் என்றே 'கரியவனைக்காணா கண்ணென்ன கண்ணே' என்று பாடுகின்றார். திருமால் திரு அவதாரங்களில் ஒன்றான கண்ணன் அவதாரத்தையே சிலம்பின் ஆசிரியர் கூறுகின்றார். கிருஷ்ண, என்ற வடமொழிச் சொல்லிற்குக் 'கருமை' என்பதே பொருளாம். இந்தப் பொருளின் அடியாகவே கரியவனை வடமொழியாளர் கிருஷ்ண எனப் போற்றினர். திருமால் சகோதரி சக்தியும் கருநிறத்தவளே. அவளை நீலமேனி வாலிழை எனப் பாரதம் பாடிய பெருந்தேவனார் குறிப்பிடுவர். வடநாட்டில் சக்தியைச் சியாமளா என்பர். இன்று கூட நாஞ்சில் நாட்டில் மகளிர்க்குக் கிருஷ்ணாம்பா எனப் பெயர் இடல் உண்டு. திருக்கோவையார் உரையில், கரியோன் என்னும் பொருளதோர் (கிருஷ்ண) பாகவதச் சிதைவே கண்ணன் எனப் பேராசிரியர் கூறுவர். பண்டைத் தமிழில் மாயோன் என்ற சொல்லும் அப்பொருளிலேயே வழங்கப் பெற்று வந்துள்ளது. ஆழ்வார்கள் கண்ணழகன், கண்போன்றவன், கண்ணில் கருணை நிறைந்தவன் என்னும் கருத்துக்கள் அமையத் திருமாலைக் கண்ணன் என்ற திருப்பெயரால் போற்றினர்.

# XIII

கண்ணனுடைய காதலியாகவும் மனைவியாகவும் ஆழ்வார்களால் போற்றப் பெறுபவளே நப்பின்னையாவாள். நப்பின்னை என்னும் சொல் நல்ல (ந) பின்னை எனவும், நம்பின்னை எனவும் பிரித்துப் பொருள் கூறத்தக்கவகையில் அமைந்துள்ளது. தன்மை, சிறப்பு என்னும் பொருள் உணர்த்தும் 'ந' என்றமுன் அடைகொண்டு கீரன் - நக்கீரன் எனவும் செள்ளை - நச்செள்ளை எனவும் வழங்கப் பெற்றமை காண்க. அம்முறையில் பின்னை என்ற பெயருடன் 'ந' சேர்த்து, நப்பின்னை என வழங்கப் பெற்றதாகக் கொள்ளலாம். நம் ஆயர் குலத்துப் பின்னை எனப்பொருள் கொள்ளத்தக்கவகையில் நம்பின்னை என அடியார்க்குநல்லார் வழங்குவர். பின்னை என்ற சொல் பின்பிறந்தவள், தங்கை எனப் பொருள்படும். கம்பனும் ''வெள்ளி மலை எடுத்து உலகம் மூன்றும், காவலோன் பின்னை காமவல்லி'' எனச் சூர்ப்பணகையைக் குறிப்பிடுகிறார். இராவணன் பின் பிறந்தாள் சூர்ப்பணகை ஆயின், நப்பின்னையாருக்கும் பின் தோன்றியவள், யாருடைய தங்கை?

> உடன்அமர் காதல் மகளிர், திருமகள் மண்மகள் ஆயர்
> மடமகள் என்றிவர் மூவர் ஆளும் உலகமும் மூன்றே
>
> (நா. திவ். பிர 2766)

என நம்மாழ்வார், திருமாலின் தேவியர் மூவரை] அவர்களின் தகுதிச் சிறப்பு எளிதில் அறியும்வண்ணம் முறைப்படுத்திக் கூறுகிறார். பெரியபிராட்டியாகிய திருமகளையும், இளைய பிராட்டியாகப் பூ தேவி (மண்மகள்) யையும், திருமாலின் இருமனைவியராகப் போற்றுவது மரபு. திருமால் கண்ணனாக இவ்வுலகில் அவதாரம் செய்தபோது, ஆயர் குல மடமகள் நப்பின்னைப் பிராட்டியை மணந்து கொண்டார். இதனால் திருமாலுக்கு மூந்தேவியரை மணவாட்டியராகக் கூறுவது தமிழ்மரபாக வந்துள்ளது.

> கூந்தல்மலர் மங்கைக்கும் மண்மடந்தைக்கும்
> குல ஆயர் கொழுந்துக்கும் கேள்வன் தன்னை
>
> (நா. திவ். பிர 3182)

'பின்னைகொல்? நிலமாமகள்கொல்? திருமகள்கொல்? பிறந்திட்டாள், என்னும் இலக்கியச் சான்றுகள், திருமகள், பூமகள் இருவருக்கும் பின்தோன்றித் திருமாலை மணந்தவள் என வலி

யுறுத்துகின்றன. "தம்முடைய தன்மை விசேடங்களாலே பகவானுடைய காதலுக்குரியவர்களான பட்டத்துத் தேவிமார்கள் மூவரோடும் இவர்க்குண்டான ஒப்புமை ……….. விருடையளாய்ப் பெரிய பிராட்டியாரைப் போன்று முடிக்குரியளான ஸ்ரீபூமிப் பிராட்டியாரோடு ஒத்த சிறப்பினை உடையவள் என்று சொல்லும் படி நப்பின்னைப் பிராட்டிக்கே உரியதான கிருஷ்ணாவதாரத்திலும்" என்னும் மணவாள மாமுனிகளின் உரைப்பகுதியும் தெளிவுறுத்துகின்றது.

திருப்பாற்கடலைக் கடைந்த போது முதலில் தோன்றியவள் மூதேவி. அவளுக்குப் பின் தோன்றியவள் இலக்குமி (ஸ்ரீதேவி). எனவே இலக்குமியின் பெயரை பின்னை எனக் கொண்டு ஆயர் மட மகளுக்குச் சூட்டி இருக்கலாம். ஆழ்வார்கள் ஸ்ரீ தேவியைப் பெரிய பிராட்டி எனவும், நப்பின்னையை ஆயர் தம் குலக் கொழுந்து என்றும் வேறுபடுத்திக் காட்டுவது கருதத் தக்கது.

**நப்பின்னை மணாளன்**

ஆயர் கொழுந்தாம் நப்பின்னை மணவாளனாகத் திருமாலை (கண்ணனை) ஆழ்வார்களும் பிறரும் கருதிப் போற்றியுள்ளனர். பெரியாழ்வார், பின்னைமணாளனை (ந.தி.பி.162) எனவும் கோதைநாச்சியார், "கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கை மேல் வைத்துக் கிடந்த மலர் மார்பா" (நா. தி. பி. 492) எனவும் திருமழிசையாழ்வார், பின்னை கேள்வ (நா. தி. பி. 850 எனவும், திருமங்கை ஆழ்வார்.

'முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை கேள்வன்
(நா. தி. பி. 1505)

'பின்னைக்கு மணவாளன்' (டி 1506)
'மென் நடைப் பூங்குழல் பின்னை மணாளர்' (டி 1966)
'பின்னைமணாளனை' எனவும்

நம்மாழ்வார்
'வெயின்மலி புரைதோளி பின்னைக்கு மணாளனை' (2399)

'வாசப் பூங்குழல் பின்னை தோள்கள் மணந்ததும்' எனவும் சைவசமயக்குரவர் ஸ்ரீ சுந்தர மூர்த்தி ஸ்வாமிகள்

பின்னை நம்பும் புயத்தான் VII . 63.6 எனவும்' மணிவாசகப் பெருந்தகை தம் திருக் கோவையாரில்,

'ஏர்ப்பின்னை தோள் முன்மணந்தவன் ஏத்த' எனவும் கூறியுள்ளனர்.

XV

எனவே நப்பின்னையை நந்தகோபன் மருமகள் என்று, 'உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன், நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்' என அழைப்பதில் ஏதும் வியப்பில்லை.

**அழகோவியம்**

நப்பின்னை அழகோவியமாகத் திகழ்ந்தாள் எனப் பண்டைத் தமிழர் கண்டனர். அவள் உடலழகுடன் உள்ளத்து எழில் வாய்ந்த ஓவியமாகத் தமிழ் நூல்களில் காட்சி தருகிறாள். கலை உணர்வு மிக்க காரிகையாகவும், காண்போர் கருத்தைக் கவரும் 'வாலைக் குமரியாகவும், ஏரும் எழிலும் பொலிவும் பெற்று அவள் திகழ்கிறாள். ஆகாத்து ஆப்பயன் கொள்ளும் ஆயர்குடியில் இத்தகு அழகுச் செல்வி தோன்றியுள்ளாள்.

பின்னை அழகிய கூந்தலை உடையவள் என்பதைச் சிலப்பதிகாரத்து 'பொதியவிழ் மலர்க் கூந்தல் பிஞ்ஞை' என்ற வரிகளாலும்

தூய நீண்ட கருங் கூந்தலாள் என்பதையும், மயிலனைய சாயலாள் என்பதைப் பெரியாழ்வார் பாசுரத்து, 'தூயகருங்குழல் நல் தோகைமயிலனைய நப்பின்னை' என்றவரிகளாலும், 'கந்தம் கமழும் குழலி' என்ற கோதைப்பிராட்டியார் பாடலாலும் மலரனைய மென் குழலாள் என்பதைப்

'பூங்குழற் பின்னை' என்ற திருமங்கை மன்னன் வாக்காலும், 'வாசப் பூங்குழற் பின்னை' என்ற நம்மாழ்வார் பாடலாலும் 'கொத்தலர் பூங்குழல் நப்பின்னை' என்ற நாச்சியார் பாடலாலும் உணரலாம்.

நப்பின்னை சிறந்த விழியழகி. அவள் விழிகள் வேலினைப் போன்று நீண்டும் கூர்மையாகவும் ஒளி பொருந்தியனவாகவும் உள்ளன. இதனை,

'வேல் நெடுங்கண் பின்னை' என்ற இளங்கோவடிகள் வாக்காலும், 'வடிவேல் தடங்கண் நப்பின்னை' 'கெண்டை ஒண்கண்', 'வராட்கெண்டை ஒண்கண்' 'வானேய் தடங்கண் மடப்பின்னை' 'மானை நோக்கி மடப்பின்னை' எனநம்மாழ்வார் அருளிய பாசுர வரிகளாலும் அறியலாம்.

இளமைத் துடிப்பும், அழகும் மிக்க நங்கைக்குச் 'சுட்டும் விழிச் சுடர்கள், சூரிய சந்திரர் போல பேரொளி வாய்ந்தனவாக இருத்

XVI

தல் வேண்டும் என்பது உடற்கூற்று நூலார் இலக்கணமாகும். இவ்விலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக நப்பின்னை விளங்கியதை மேலேகுறிப்பிட்ட பாடற்பகுதிகள் தெரிவிக்கின்றன.

நப்பின்னையின் ஒளிமுகத்துக்கும் பேரழகூட்டிய இருவிழிகளைப் போன்றே அவள் செங்கனிவாயும் அமைந்தது.

'முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை எனத்திருவாலி மன்னர் கூறுகிறார்.

நப்பின்னை மூங்கிலைப் போன்று நீண்டு வளர்ச்சி மிகு வடிவார்ந்த தோளழகி என்பதை

'காம்பனை தோட் பின்னை', 'வேயின் மலி புரைதோளி பின்னை,' 'நெடும்பணைத் தோள் மடப்பின்னை' என்ற நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பகுதிகளும், அவள்கரங்களில் அழகிய வளையல்கள் நிறைய அணிந்திருந்தாள் என்பதை 'வரிவளைக்கைப் பின்னை' என்ற சிலப்பதிகாரப் பாடலாலும் அறியலாம்.

பின்னையின் மெல்லிய இடையும் அதன் மேற் பகுதியில் மதர்த்து விளங்கும், குடம் போன்ற தனங்களும் அவளைப் பேரழகியாகப் பொலியச் செய்தன. இதனைச் 'செப்பன்ன மென்முலைச் செவ்வாய் சிறுமருங்குல் நப்பின்னை, நங்காய்' என நாச்சியார் தம்திருப்பாவையில் சுட்டுகிறாள்.

இவள் நடையழகை

'பொன்னங்கலை அல்குல் அன்ன மென்நடைப்
பூங்குழற் பின்னை' எனத் திருமங்கை மன்னர் குறிப்பிடத் தவறவில்லை

இவ்வாறு கூந்தல், விழிகள், செவ்வாய், தோள்கள், கரங்கள் முலைகள், இடை, நடை எனத் தனித்தனியாக நப்பின்னை அழகைச் சுட்டும் வரிகளைக் காணும் போது நப்பின்னை ஒரு பேரழகி, அழகோவியம் எனல் உபசாரவழக்கன்றி உண்மையாகும் அல்லவா ?

இவ்வளவு சிறப்பாகப் பண்டை இலக்கியங்களில் போற்றப் படும் நப்பின்னை யார் ? என்பதை இவ்விலக்கியங்கள் தெளிவு படுத்த வில்லை.

திருப்பாவை வியாக்கியானத்தில்,

'நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்' என்றபகுதிக்கு கும்பன் மகளே என்னாது நந்த கோபாலன் மருமகளே எனப்

XVII

புகுந்த வீட்டுச் சிறப்புக் கூறப்பெற்றது என்பர். இதனால் நப்பின்னை கும்பன் மகள் எனக் குறிப்பிடப் பெறுகிறாள். ஆயின் இத்தக் கும்பன் பற்றி வேறொன்றும் சம்ஸ்கிருத நூல்களாற் புலனாகவில்லை. இச்செய்தி நாஞ்சில் நாட்டைச் சார்ந்த ஒரு நாட்டுப்புறக் கதைப்பாடலாம் கஞ்சன் வதை என்ற சுவடியில் யசோதையின் தம்பி கும்பன் எனவும், அவன் மகள் நப்பின்னை எனவும், கும்பன் ஆநிரைக் கூட்டத்தில் காலநேமி என்ற அசுரன் மக்கள் ஏழு பேரும் ஏழு முரட்டுக் காளைகளாக இருந்து தொல்லை விளைத்தனர் எனவும், இவ்வேழு காளைகளை அடக்குவோனுக்குத் தன்மகளை மணம் செய்து தருவதாகக் கும்பன் அறிவிக்க, கண்ணன் அவ்வேழு காளைகளையும் அடக்கி நப்பின்னையை மணந்ததாகவும் காணப்பெறுகின்றது. இக்கதையைப் படித்தபின் ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவையில் மாமன் மகளே! என விளிப்பது நப்பின்னையையே என்பது புலனாகின்றது.

**ஏறுதழுவல்**

பண்டைக்கால முல்லை நில ஆயர்குடி மக்கள், தங்கள் மகளிருக்குரிய மணவாளனைத் தேர்ந்தெடுத்த முறை புதுமையானது. தாங்கள் வளர்க்கும் முரட்டுக் காளைகளை (ஏறு) அடக்கும் ஆண்மையும் வீரமும் உடைய இளைஞர்க்கே தம் மகளிரைப் பெண்ணின் பெற்றோர்கள் திருமணம் செய்து கொடுத்தனர். இவ்வாறு காளைகளை அடக்குவதை ஏறுதழுவுதல் என்பர். இவ்வாறு ஏறுகளை அடக்கும் இளைஞர்களை ஆயரும் ஆய்ச்சியரும் பாராட்டுவர். ஏறுதழுவலில் ஈடுபடாத இளைஞனை ஆயர் மகள் கணவனாக ஏற்கமாட்டாள். இதனை, 'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும், புல்லாளே ஆய மகள்' என்பதால் அறிகின்றோம். ஏறுதழுவுதல் என்ற போட்டியில் வென்ற ஆண்மகனுக்கே தங்கள் மகளை ஆயர் திருமணம் செய்து கொடுத்தனர் என்பது இதனால் அறியவருகின்றது.

ஆயர் தம் குலக் கொடியாகிய நப்பின்னையை, ஆயர் குலத் துதித்த கோபாலனாம் கண்ணன், அவன் தந்தை வளர்த்து வந்த ஏழுகொடிய எருதுகளை அடக்கி மணந்தான். இச்செய்தியை ஆழ்வார்களும் பிற்காலப் புலவர்களும் எடுத்துரைக்கின்றனர்.

'வம்பவிழ் கோதை பொருட்டா மால்விடை ஏழும் அடர்த்த
செம்பவளத் திரள் வாயன்'

'தோளிசேர் பின்னை பொருட்டு எருதேழ்தழீஇக்
கோளியார் கோவலனார்'

ந. பி. II

## XVIII

'சட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்திமில்
ஏற்றுவன்கூன்
கோட்டிடை ஆடினை கூத்தடல்; ஆயர்தம் கொம்பினுக்கே'

'காம்பனை தோள்பின்னைக்கா ஏறுடனேழ் செற்றதுவும்'

'நெடும்பணைத்தோள் மடப்பின்னை
பொறையினாள் முலை அணைவான் பொருவிடைஏழ்
அடர்த்துகந்த' என நம்மாழ்வாரும்,

'தூய கருங்குழல் நல்தோகை மயிலனைய, நப்பின்னை
தன்திறமா நல்விடை ஏழவிய' எனப் பெரியாழ்வாரும்,

'ஆன் ஏறு ஏழ்வென்றான்' எனக் குலசேகரப் பெருமாளும் போற்றியுள்ளனர். இவர்களுக்குப் பின்வந்த பின்னைப்பெருமாளையங்கார் தம் திருவேங்கடத் தந்தாதியில்

'நப்பின்னையாம்
விரகதத்தை தக்கு விடையேழ் தழுவின வேங்கடவன்' என்பார்.

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த எளியேனும் குருவாயூரப்பனைத் துதிக்கும் ஒருபதிகத்தில்

'ஏழானை வென்று பின்னைதனை ஏற்றானை' எனக்குறிப்பிட்டுள்ளேன்.

பின்னை பொருட்டுக் கண்ணன் ஏறடர்த்த செய்தி மட்டும் குறிப்பாக ஆழ்வார் பாசுரங்கள் கூறியுள்ளன. எனினும் இவ்வேறு தழுவிய வரலாறுபற்றி விவரம் நாம் அறியக் கூடவில்லை. ஆனால் பிற்காலத்து ஆழ்வார் பாசுரங்களுக்கு உரை வகுத்த மணவாள மாமுனிகள்.

'தாழ்வற்ற எல்லையான ஆயர்குலத்திலே கிருஷ்ணனாக வந்து பிறந்து தன்னைப் (நப்பின்னை) பெறுகைக்குச் (கன்யா) சுல்கமாக இட்ட யமனை ஒத்தவையான இடபங்களின் கொம்புகளினிடையிலே கருமாறிப் பாய்ந்தாற் போல' என ஆசார்ய ஹ்ருதயத்தில் உரைத்துள்ளனர்.

சம்ஸ்கிருத பாகவதங்கள் வேறு வகையில் இச்செய்தியை விவரிக்கின்றன. கோசல நாட்டு மன்னன் நக்னஜித்து என்பவனுக்குச் சத்யவதி என்னும் அழகிய மகள் ஒருத்தி இருந்தாள். மன்னன் தன்னுடைய ஆநிரையில் உள்ள ஏழுகாளைகளை அடக்கிப் பிடித்துக் கட்டுபவனுக்கே தன்மகளை மணம் செய்து தருவதாக அறிவித்தான். இதனையறிந்த கண்ணபிரான் அக்காளைகளைத் தானே சென்று அடக்க நினைத்தார் அந்த எருது

XIX

கள் காலநேமி என்ற அசுரனின் பிள்ளைகள் என்பதை அவர் அறிந்தார். தானே ஏழுவடிவம் கொண்டு ஏழு எருதுகளையும் பிடித்துக் கட்டி அரசனிடம் சென்றார். அரசன் சத்தியவதியைக் கண்ணனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அந்த அரசிளங்குமரி கண்ணனின் பட்டமகிஷி எட்டுப் பேருள் ஒருத்தியாக விளங்கினாள் எனப் பாகவதம் கூறுகின்றது.

தமிழில் வந்துள்ள செவ்வைச் சூடுவார் பாகவதத்திலும் இச்செய்தியே விவரிக்கப் பெற்றுளது. ஆனால் மதுரகவி வரதராசர் தம் கண்ணன் அவதாரத்தில் நப்பின்னையைப் பற்றிய செய்திகளை ஒரு தனிப் படலமாகவே அமைத்துள்ளார். இளங்கோவடிகளும் ஆழ்வார்களும், வியாக்கியானக்காரர்களும் குறித்துள்ள நப்பின்னையின் வரலாற்றுச் செய்தியைத் தொகுத்து [illegible] காதற் காப்பியமாக அருளாளதாசர் அருளியுள்ளார். அதில் யசோதையின் தமையன் கும்பகன் மிதிலையில் வாழ்ந்த ஆயர் தலைவன் என்றும், அவன் மகள் நப்பின்னை என்றும், அப்போதைய மிதிலை மன்னன் வெகுலாசுவன் என்றும் அவன் படைகளால் கும்பகனுடைய முரட்டுக் காளைகளை அடக்க இயலவில்லை என்றும், அவற்றைக் கண்ணன் அடக்கி நப்பின்னையை மணந்ததாகவும் கூறியுள்ளார்.

இங்ஙனம் தமிழ் மரபுப்படி ஏறுதழுவி ஆயர் மடமகளை ஆயர் குடியில் வளர்ந்த கண்ணன் மணம் புரிந்த செய்தியைச் சிறப்பாகக் கூறியதுடன், வடமொழி மரபுப்படி நக்னஜித் மகள் சத்யவதியை ஏறுதழுவி மணந்த செய்தியையும் வரதராசர் கூறியுள்ளார். கண்ணன் இரு பெண்களை (நப்பின்னை, சத்யவதி) ஏறுதழுவி மணந்ததாக வரதராசர் கூறுவதற்கு வடமொழி நூல்களில் எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. தமிழ் நாட்டுப் பண்டைக் கதைகளைப் போற்றும் நிலையில் தம் நூலுள் நப்பின்னைப் படலத்தைச் சேர்த்துத் தமிழில் இவர் புதுமை செய்துள்ளார். இதன் மூலம், நப்பின்னை ஆயர் குலமகள் என்பதும், அந்தக் குலமரபுக் கேற்ப ஆயர் குலத்து வளர்ந்த கண்ணன் விடைதழுவி அவளைமணந்தது ஆயர் பாடியில் அப்பெருமான் வளர்ந்த காலத்து நிகழ்ச்சியாகத் தமிழ் நாட்டு மக்கள் போற்றி வந்த வரலாறு என்பதும் புலப்படும்.

ஏழாம் நூற்றாண்டு மாமல்லபுரத்துச் சிற்பங்களில் கோவர்த்தனகிரி சிற்பம் அமைந்த மண்டபம் காண்போர் கருத்தைக் கவருவதாகும். அதில் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து

XX

ஆயர்களுக்கு அடைக்கலம் தருகிறான் கண்ணன். அந்நிலையில் அவனருகே நாணமுடன் நிற்கும் நங்கை ஒருத்தி காணப்படுகிறாள் அவள் யார்? அவளே நப்பின்னை எனக் கூறலாம் அல்லவா? இந்தக் காட்சியின் அழகுத் திருக்கோலத்தை அட்டைப் படத்தின்; இறுதியில் அமையும்படிச் செய்யப்பட்டுள்ளது இந்தப் படத்தைத் தந்துதவிய தமிழக தொல்பொருளாய்வுத் துறையினருக்கு நன்றி பல.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் மதுரை மாவட்டத்துக் கம்பம் பள்ளத்தாக்கில் உத்தம பாளையத்தை அடுத்த அனுமந்தன்பட்டி என்ற இராமத்தில் தோன்றியவர், மதுரகவி ஸ்ரீநிவாசையங்கார் அவர் கருவிலே திருப்பெற்ற கவிஞர். பல்லாயிரம் தமிழ்ப்பாடல்களை இயற்றியருளிய பெருந்தகையாளர். இவர் பாடிய நூல்களில் பல இன்றும் கிடைக்கவில்லை. கிடைப்பவற்றையேனும் பாதுகாத்து வெளியிட வேண்டும் என்ற முயற்சியில் அவர் வழித்தோன்றலாம். சென்னை K. கோவிந்தராசன், பெரிதும் முயன்று வருகிறார். அம்முயற்சியின் பயனாகச் சென்ற ஆண்டில் ''மதுரகவி இராமாயண வெண்பா'' (சுமார் 4000 வெண்பாக்கள்) வெளிவந்தது இப்போது மதுரகவியாரின், ''கண்ணன் அவதாரம்'' வெளிவருகின்றது. கண்ணன் அவதார நூலுக்கு மூலமாகத் தமிழ்ப் பாகவதங்களைக் கொண்டதாகப் பாயிரத்துள் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் அருளாளதாசர் பாகவதத்தைத் தழுவியே தம்நூலை ஆக்கினார் என்பது நூலைப் படிக்குங்கால் புலனாகும்.

மதுரகவி ஸ்ரீநிவாசையங்கார், தம் கண்ணன் அவதாரத்தில் நப்பின்னைப் பிராட்டியார் திருமணப் படலத்தைச் சேர்த்தது மட்டுமன்றி, அருளாளதாசர் அருளிய மோகினி அவதாரமாம் உருக்குமாங்கதக் கதையைத் (ஏகாதசி விரதச் சிறப்பை) தனி நூலாக ஆயிரத்து இருநூறு பாடல்களுக்கு மேல் பாடியுள்ளார்.

தம் கண்ணன் அவதாரத்தில் முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றினர் ஆயினும், ஆழ்வார் பாடல்களில் உள்ள ஈடுபாட்டாலும், தமிழ்மரபில் ஊன்றித் தோய்ந்த பற்றினாலும் புதுமைகள் படைத்துள்ளார். அருளாளதாசர், நப்பின்னைப் படலம் என 36 பாடல்களில். பாடியுள்ள போதிலும் தம் பாகவதத்தில் உருக்குமிணிப்பிராட்டியார் திருமணத்துக்கு முக்கியம் கொடுத்து உருக்குமிணி திருமண வரலாற்றைப் படல்[illegible] படலம் (65) முதல் உருக்குமிணி திருக்கலியாணப் படலம்

79) வரை விரிவாகப் பதினைந்து படலங்களில் 1351 பாடல்களாகப் புனைந்துள்ளார்.

நம் மதுரகவியோ தமிழ்நூலாம் தம் கண்ணன் அவதாரத்தில் தமிழ்மரபை ஒட்டிய வகையில் ஆயர் குலக்கொடியாம் அழகோவியம் நப்பின்னைப் பிராட்டியை, ஆயர் வழக்கப்படி ஏறுதழுவி ஆயர் குலக்கொழுந்தாம் கண்ணன் மணந்த நிகழ்ச்சிக்கு முக்கியம் கொடுத்து 75 பாடல்களில் நப்பின்னைப் பிராட்டியார் திருமணம் என ஒரு அத்தியாயம் பாடியுள்ளார் மேலும் தம் கண்ணன் அவதாரத்தில் உருக்குமிணிப்பிராட்டியுடன் பல அரச கன்னியரைக் கண்ணன் மணம் புரிந்த செய்திகளை உருக்குமிணி ஆதியோர் திருமணம் உரைத்த அத்தியாயம் என ஒரே அத்தியாயத்தில் 67 பாடல்களில் சுருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

மதுரகவியின் கண்ணன் அவதாரம் கண்ணனருளால் இப்போது வெளிவருகின்றது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஆழ்வாராதியர் போற்றிய நப்பின்னை திருமணத்தைத் தமிழ் மக்கள் படித்துணர்ந்து பயன்பெற வேண்டும். நப்பின்னை பற்றிய தெளிவு வரவேண்டும் என்ற கருத்தில் தனியாக ஒரு சிறுநூலாக நப்பின்னை திருமணம் வெளிவருகின்றது.

இந்த நூலில் கண்ணன் ஆயர்பாடியில் வளர்ந்து வருகையில் மிதிலை நகரில் பரவிப் பாம்பெனக் காயும் ஏழ் எருதடர்காதை கூறுவாம் "எனத் தோற்றுவாயில் குறிப்பிட்டுள்ள, மிதிலை நாட்டுச் சிறப்பைச் சீதையாம் மயர் உறை தெய்வநாயகி, தாதையாகிய சனகமுனிவன் ஆண்டது. தேவர்களும், மனிதர்களும் மகர் நூலிப் புகழ்ந்து கூறும் சிறப்புடையது எனக் கூறப்பெற்றுள்ளது. மேலும் 'மஞ்சுசூழ் கோபுர மாடவீதியால், விஞ்சையர் நாட்டினும் மேன்மை சான்றது எனவும் நீர்வளம் மிக்கதென்பதை கஞ்சதாள் மலர்க் காடு மேயது எனவும் மக்கள் கல்வியின் வல்லார் என்பதைச் செஞ்சொல் நாற்கவிவல்லோர் சிறந்து வாழ்வது எனவும் சிறப்பிக்கப் பெற்றுள்ளது. பின்னர் இவ்வளமான நாட்டில் வெகுலாசுவ மன்னன் ஆட்சியில், தேன்சொட்டும் மலர்ப்பூங் காவனம் மிக்க மிதிலைநகரில், யசோதை நாயகன் நந்த கோபன் குலத்தைச் சார்ந்த கும்பகன் என்னும் குபேர வாழ்க்கையான், பல அறங்களும் புரிந்து வரும் செய்தி கூறப்படுகின்றது.

அத்தகைய கும்பகன் செய்த அரிய மாதவப்பயனின் வடிவம் என எடுத்துக் காட்டுவது போல, ஓவிய, சிற்பக்கலை வல்லுனரும்

(14)

## XXII

நிலைத்து அதிசயிக்கும் உத்தம இலக்கணமொடு ஒரு பெண் கொடி உதித்தனள் என உரைக்கப் பெற்றுளது. ஆழ்வார்கள் அழகோவியமாகக் குறிப்பாக உணர்த்திய இப் பெண் கொடியின் வடிவ வர்ணனை கேசாதி பாதமாக இருபத்தி நான்கு பாடல்களில் வருணிக்கப் பெற்றுள்ளது. மேலும் கவிஞர் தமக்குக் கம்பன் கவியில் உள்ள ஈடுபாடு,

> ''அவி இன்பம் நுகரும் தேவர் அமிழ்தினும் இனிய கம்பன்
> கவி இன்பம் எனை உள்ளம் கலந்து இன்பம் காட்டும்''

எனக் கூறப் பெற்றுள்ளது. கம்பன் மிதிலைக் காட்சியில்,

'தென்னுண் தேனின் தீஞ்சுவை, செஞ்சொற் கவி இன்பம் கன்னிம் மாடத் தும்பரினூடே, என இராம இலக்குவர் கண்ட காட்சியில் வரும் செஞ்சொற்கவி இன்பத்துக்கு இங்குக் கம்பனையே எடுத்துக் காட்டியது சிறப்பாகும். மேலும் உவம இலக்கணம் கூறியுள்ள உவமைகளைக் கூறி நப்பின்னையின் அழகுக்கு அவ்வுவமைகள் ஒவ்வொரு காரணத்தால் ஒவ்வாது எனக் கூறியுள்ள கற்பனை நயம் உணர்ந்து அனுபவிக்கத்தக்கதாகும்.

அதன்பின் கும்பகன் தொழுவத்தில், வெம்பு அடல் கால நேமி, விறல்கதிர் எழுவர், 'விண்தோய் கொம்பு அடல் கிரி போன்ற ஆன்ஏறாய் விளங்கினர் எனக்கூறி, அக்காளைகளின் கொட்டம் சிறப்புற வருணிக்கப் பெற்றுள்ளது.

அந்தக் காளைகளின் தொல்லையால் நாடும் மக்களும் இடருறுதல் கண்ட மன்னன் வெகுளாகவன், தன்படை வீரர்களை அவ்வெருதுகளை அடக்குமாறு அனுப்ப, வீரர்கள் சென்று காளைகளை அடக்க முயன்று தோற்று, மன்னன்பால் இறந்தோர் ஒழிய எஞ்சியோர் வந்து செய்தி கூறவும் மன்னன் கும்பகனை அழைத்து எருதுகளை அடக்கிக் கட்டிவைக்க ஆணையிடுகிறான்.

கும்பகன் அந்த ஆணை ஏற்று, ஏழ் எருதுகளையும் வென்று கட்டினாலும் அன்றிக் கொன்று வெற்றி கொண்டாலும் அவருக்கு என்மகளை மணம் செய்து தருவல் என அறிவிக்கின்றான். இங்குதான் கும்பகன் மகள் 'நப்பின்னை' எனும் பெயர் குறிக்கப் பெறுகிறாள்.

## XXIII

பலவீரர்களும் எருதுகளை அடக்கப் பலவகையிலும் முயன்று தோல்வியுற்று இறந்துபட, ஆயர் செல்வன் கும்பகன் வருந்தி என்ன செய்யலாம் என மனதில் கருதி, நந்தகோபனுக்கு என் தங்கை (நப்பின்னை) ஊறிலா மனத்தக்கு இங்கண் உறுக நின் இளையோடென்ன, ஓலை வரைந்து தூதனுப்புகின்றனன். தூதர் தம் உரையும், ஓலைச் சுருளிடை உரையும்' நோக்கி நந்தகோபன் அம்புயக்கண்ணனொடும், சீதளமதியமன்ன சேய் பலராமனோடும், சுற்றம் சூழப் போது அவிழ் பொழில்கள் சூழ்ந்த பொன் மதில் மிதிலைபுக்கசெய்தி கூறப் பெற்றுள்ளது. இங்கும் கம்பன் வாக்காகிய பொன்மதில் மிதிலை புக்கார் என்ற தொடரை மதுர கவி ஆண்டிருப்பது கருதத்தக்கதாகும்.

மிதிலை வந்த விருந்தினர்களைத் தக்கவாறு உபசரித்துக் கூற்றமும் வெருவும் ஏழெருதின் கொற்றத்து ஆற்றலை அடக்கி என்றன் அரும்பெறற்புதல்விதன்னை, தகைசால் நின்றன் மகனுக்கு அணிமணம் புரிவித்து என் மனக் கவலை தீர்ப்பாயாக' எனக் கும்பகன் நந்தகோபனிடம் விண்ணப்பித்தான். அவ்வுரை கேட்ட நந்தகோபன் முறுவலுடன், மங்கலம் தொடை (முல்லை மாலை) மார்பினன் கண்ணன் திருமுகத்தை நோக்கவும், கண்ணன் வெவ்வரி ஏறுபோல, விடைபோல, நாஞ்சிற் செங்கைச் செல்வன் (பலராமன்) பக்கலில் வர எழுந்து சென்ற செய்தி கூறப்பெற்றுள்ளது. இவ்விடத்தும் கம்பன் காட்டிய மௌன நாடக நெறியைக் கவிஞர் கையாள்வது நயமிக்கதாகும்.

'கோட்டுடைக் குன்றம் என்னக்குலவும் ஏழ் எருதின் பாங்கர் வீட்டுடைத் தலைவன் மேனி, வேகமருத்து (காற்று) என மழைக் கன்றன்ன கண்ணன் மலைத்து எழுவகை விடைகளை அட்டான்' எனக் கூறப்பெற்றது.

இராமாவதாரத்தில் சிவதனுவை ஒடித்தபின் மிதிலைப் பெண்கள் உரையாடலை,

தயரதன் புதல்வர் என்பார் தாமரைக் கண்ணன் என்பார்
புயல் இவன் மேனி என்பார் பூவையே பொருவும் என்பார்
கயல்பொரு கடலுள்வைகும் கடவுளே காணும் என்பார்

என்ற கருத்தை ஒட்டிக் கும்பகன் காலத்து மிதிலைப் பெண்கள்,

'கருமுகில் வண்ணன் என்பார் கண்கள் வாய் கமலம் என்பர்
திருமறு மார்பன் என்பார்'

எனக் கூறப்பெற்றமை கம்பன் கவிச்சுவையில் மதுரகவி எவ்வளவு தோய்ந்தாய்ந்துள்ளார் என்பது புலப்படுகின்றது. கண்ணன் தன் ஏழாம் பருவத்துச் செய்தவீரச் செயலாகவும் அதன் வழி

XXIV

நப்பின்னையை மணந்ததாகவும் கவிஞர் கூறுவதால் கண்ணன் முதன் முறையாக ஏறுதழுவி விதிமுறையே பெற்றோர் வாழ்த்தப் பின்னையை மணம் புரிந்தான் என்பது வெள்ளிடை மலையாகும்.

கும்பகன் மிதிலையை அலங்கரித்துத் திருமண ஏற்பாடுகள் புரிய நப்பின்னை கரம்பிடித்து, தீவலம் வந்து மறையோரும், பெண்களும் தேவரும் வாழ்த்த மணம்புரிந்து பின் கும்பகன் வழியனுப்பப் பெற்றோருடன் கண்ணன் நப்பின்னை மணாளனாக ஆயர்பாடிவந்து வாழ்ந்து வந்தான். அதன் பின்னர்க் கமலை, நீளை, இராதை, அளகவல்லி, பூரணை, இந்துவல்லி, வெயில் மணிச்சோதி, ஆதி மெல்லியலாரை உலகுமூன்றும் வாயிடைக் கொள்ளும் மைந்தன் வேட்டான் என நப்பின்னை திருமணம் உரைக்கப் பெறுகின்றது.

வட நாட்டில் கண்ணனின் காதலியாக ராதை பேசப்படுகின்றாள். ஜயதேவர் 'கீத கோவிந்தமும்' சித்தூர் ராணி மீராவும் ராதையைக் கண்ணன் உகந்த காதலியாகவும் பேசுகின்றனர். இந்த ராதை யார்? அவள் தோற்றம் யாது? என்பது ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. கண்ணன் சிறு வயதில் ஆயர்பாடியில் ஆடிப்பாடி மகிழ்ந்த கோபியருள், அவன் உள்ளம் கவர்ந்த ஒரு அழகியைப் பாகவதம் சிறப்பாகக் கூறுகின்றது. அவள் கண்ணனைவிட வயதில் மூத்தவள். திருமணம் ஆனவள்; அவள் அன்பில் உள்ளம் உருகிக் கண்ணன் அவளை மட்டும் தனியே வனத்துள் அழைத்துச் சென்று களியாட்டயர்ந்ததாகப் பாகவத புராணம் கூறுகின்றது.

'கன்னி ஒருத்தியைச் சோலைத் தடங்கொண்டு புக்கு முத்தார் கொங்கை புணர்ந்திரா நாழிகை மூவேழு சென்றபின் வந்தாய்' என்று பெரியாழ்வார் குறிப்பிடும் செய்தியும் பாகவதக் கருத்தும் ஒன்றாக இருக்கலாம்.

நப்பின்னையே ராதை என வட நாட்டில் வழங்கப் பெறுகிறாள் எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால் அருளாளதாசரும் மதுரகவி ஸ்ரீநிவாசையங்காரும் நப்பின்னை திருமணத்தைத் தனிப் படலமாகப் பாடி இறுதியில் நப்பின்னையை மணந்த பின் கண்ணன் மணந்த கமலை முதல் வெயில்மணிச்சோதிவரை எழுவருள் ராதை ஒருத்தியாகக் கூறப்படுவதால் நப்பின்னை வேறு ராதை வேறு என்பது புலனாகும்.

A (17)

XXV

பழந்தமிழ் இலக்கியங்களும் ஆழ்வார்களும் குறிப்பிடும் நப்பின்னைப் பிராட்டி திருமணம் அனைவரும் பயின்று பயன் பெற வேண்டும், தமிழகமெங்கும், ராதாகலியாணம், உருக்குமணி கலியாணம் போன்று பரவ வேண்டும் என்ற பேராவலினால் இந்த நூல் கண்ணன் அவதாரத்தினின்றும் எடுக்கப்பெற்றுத் தனி நூலாக வெளிவருகின்றது.

இச்சிறு நூல் தனியே வெளிவர அருளிய திருவருளைப் போற்றுகின்றேன். நூலை வெளியிட ஊக்கமுடன் ஈடுபட்ட திரு கோவிந்தராசன் தம்பதியர்க்குச் சகல சௌபாக்கியங்களும் நீண்ட ஆயுளும் அருள இறைவனைப் போற்றுகின்றேன். இத் திருப்பணியில் மதுரகவியார் வாக்கிற்கு என் புன்மதிக்கெட்டிய வாறு உரை என ஏதோ வரைந்துள்ளேன். இதுவும் இறைவன் திருவருளே.

குற்றங்களைந்து வாசிக்குமாறு கற்றறிந்த மாந்தர்கள் திருவடி வணங்கி வேண்டுகிறேன்.

செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுக.

1-10-91
பரப்பனங்காடி
கேரளம் 676303

'கம்பன்'

மதுரகவி

# நப்பின்னைப் பிராட்டியார் திருமணம்

---

## அநுமன் துதி

1.

வரதனை இராமனை மனத்துள்நீக்கிடா
விரதனைச் சனகிதன் வாழ்த்து மேவிய
சரதனை அறிவனைத் தரும ரூபனை
இரதனை அனுமனை இறைஞ்சி ஏத்துவாம்

## நூல்

2.

ஆயர்தம் பாடியில் அனகன் இவ்வணம்
தீயன கடந்தனன் திகழ்ந்து வைகும்நாள்
பாயுநீர் மிதிலையில் படர்ந்து பாம்புஎனக்
காயும்ஏழ் எருதுஅடர் காதை கூறுவாம்

---

1. வரதனை - தன் அடியார்களுக்கு வேண்டும் வரம் அளிப்பவனை ; இராமனை - ஸ்ரீராமபிரானை ; மனத்துள் நீக்கிடா - சிந்தையினின்றும் அகற்றாத ; விரதனை - விரதம் கொண்டவனை ; சனகிதன் வாழ்த்து மேவிய - சீதா தேவியால் சிரஞ்ஜீவி எனவாழ்த்தப் பெற்ற ; சரதனை - சிரஞ்ஜீவியை ; அறிவனை - சிறந்த ஞானமுள்ளவனை ; தருமரூபனை - அறவடிவினை ; இரதனை - இலங்கைப் போரில் இராமனைச் சுமந்து தேர் என இருந்தவனை ; அனுமனை - ஆஞ்சநேயனை ; இறைஞ்சி ஏத்துவாம் - வணங்கித் துதிப்போம் ;

2. ஆயர்தம் பாடியில் - ஆய்ப்பாடியில் ; அனகன் - பரமன் கண்ணன் ; இவ்வணம் - இவ்வாறு ; தீயனகடந்தனன் - தீமைகளை அப்பாலாக்கியவனாக ; திகழ்ந்து - விளங்கி ; வைகும்நாள் - இருக்கும் நாளிலே ; பாயும்நீர் மிதிலையில் - ஆற்றுநீர் பாயும் மிதிலை நாட்டில் ; படர்ந்து - பரவி ; பாம்பென - அரவம்என்ன ; காயும் - துன்புறுத்தும் ; ஏழு எருது அடர் - ஏழு காளைகளை அடக்கிய ; காதை - கதையை ; கூறுவாம் - சொல்லுகிறோம் ;

த. பி-1

3.

சீதையராம் மலர்உறை தெய்வ நாயகி
தாதையா கியமுனிச் சனகன் ஆண்டது
மேதினி யோர்களும் விண்உள் ளோர்களும்
போதுதூய்ப் புகழ்வது புகலும் நாடதே

4.

மஞ்சுசூழ் கோபுர மாட வீதியால்
விஞ்சையர் நாட்டினும் மேன்மை சான்றது
கஞ்சநாள் மலர்த்தடக் காடு மேயது
செஞ்சொல் நாற்கவிவலோர் சிறந்து வாழ்வது

5.

மதிலை வெண்வரைஎன வகுக்கற் பாலதாம்
அதுவெகு லாசுவன் ஆட்சி ஆயது
மதுவிரி மலர்ப்பொழில் வளத்தின் மாட்சிசால்
மிதிலைஎன்று ஒருநகர் வியப்ப வைகுவான்

---

3. சீதையாம் - சீதா தேவியாகிய ; மலர்உறை - தாமரை மலரில் வசிக்கும் ; தெய்வநாயகி - இலக்குமியின் ; தாதையாகிய - தந்தையாகிய ; முனி - ராஜரிஷி ; சனகன் ஆண்டது - சனகமன்னரால் ஆளப்பெற்றது ; மேதினியோர்களும் - நிலவுலக மக்களும் ; விண்ணுளோர்களும் - வானவர்களும் ; போதுதூய் - மலர்தூவி - புகழ்வது - சிறந்துரைப்பது ; புகலும் நாடதே - கூறும் மிதிலை நாடு அதுவாகும் ;

4. மஞ்சசூழ் கோபுர மாடவீதியால் - மேகம் தவழும் கோபுரங்களுடைய மாடங்கள் அமைந்த தெருக்களினால் ; விஞ்சையர் நாட்டினும் - வித்தியாதரர் நாட்டைவிட; மேன்மை - மேலான தன்மை; சான்றது - பொருந்தியது; கஞ்சநாள் மலர்த்தடக் காடு மேயது - தினமும் மலரும் தாமரை மலர்த் தடாகங்கள் நிறைந்த சோலைகளைக் கொண்டது ; செஞ்சொல் நாற்கவி வலோர் - சிறந்த சொற்களால் நாலுவகை (ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்) கவிதை புகல வல்லோர் ; சிறந்து - சிறப்புடன் ; வாழ்வது - வாழப்பெற்றது ;

5. மதிலை-சுற்றியுள்ள மதிற் சுவரை ; வெண் வரை என - பனிபடர்ந்த உயர்ந்த வெண்மையானமலை என்று;வகுக்கற் பால

6.

வெம்பகம் பிளந்தவன் தாதை மெல்லியல்
அம்பகம் மலர்ந்தகண் அசோதை நாயகன்
நம்பக நல்வழி நந்த கோன்குலக்
கும்பகன் என்றுஒரு குபேர வாழ்க்கையான்

7.

அளவுஅறும் ஆநிரைக்கு அதிபன் அந்தணர்க்கு
அளவுஅறும் ஆநிரை அளிக்கும் நாளினான்
அளவுஅறும் நிதிஉளான் அணிநல் ஆடையான்
அளவறு குணங்களால் அமைந்து வைகினான்

---

தாம் - கூறத்தக்கது ; அது - அந்த நாடு ; வெகுலா சுவன் ஆட்சி யாயது - வெகுலாசுவன் என்பான் அரசாள்வது ; மதுவிரி - தேன் நிறைந்த ; மலர்ப்பொழில் - மலர்ச் சோலை ; வளத்தின் - அழ கின் ; மாட்சி - பெருமை ; சால் - கொண்ட ; மிதிலை - மிதிலா புரி ; என்றொரு நகர் - என ஒருநகரம் ; வியப்ப - நன்கு மதிக்க ; வைகுவான் - வாழ்ந்திருப்பான் ;

6. வெம்பகம் பிளந்தவன் - கொடிய கொக்கு வடிவில் வந்த அசுரனைப் பிளந்த கண்ணனின் (கொக்கின் வாய் கீண் டானை) ; தாதை - தந்தை ; மெல்லியல் மென்மையான இயல் புடைய ; அம்பகம் மலர்ந்த - நீரில் தோன்றும் தாமரையனைய ; கண் - விழிகளுடைய ; அசோதை நாயகன் - யசோதை கணவன் ; நம்பக நல்வழி - நம்பத்தகுரிய நல்வழிச் செல்லும் ; நந்தகோன்குல- நந்தகோபன் குலத்தில் ; கும்பகன் - கும்பகன் என்ற பேருடைய ; குபேர வாழ்க்கையான் - குபேரன் அனைய செல்வம் மிக்க வாழ்க்கையினான் ;

7. அளவறு - கணக்கற்ற ; ஆநிரைக்கு அதிபன் - பசுக் கணங்களுக்கு உரியவன் ; அந்தணர்க்கு - வேதியர்களுக்கு ; அளவு அறும்-கணக்கற்ற ; ஆநிரை - பசுக்கள் ; அளிக்கும் -கோதானம்புரி யும் ; நாளினான்- நாட்களை கொண்டவன் ; அளவறு நிதியுளான்- கணக்கற்ற செல்வத்தினான் ; அணிநல் ஆடையான் - நல்ல ஆபரணங்களும் ஆடைகளும் உடையவன் ; அளவறு குணத் தினால் - அளவற்ற நல்ல குணங்கள் அமைந்து ; வைகினான் - பொருந்தி இருந்தான் ;

8.

அத்தகைக் கும்பகன் அரிய மாதவம்
இத்தகை உருளனக் காட்ட லேஎனச்
சித்திர வினைஞரும் திகைப்ப ஓர்கொடி
உத்தம இலக்கண மொடும் உதித்தனள்

9.

அப்பெணின் உருவமும் அழகும் ஆசறு
செப்பமும் மற்றுள திறனும் செப்பிடாது
இப்படி விடுத்திடல் எளியது ஆதலின்
ஒப்பனை ஒருசிறிது உரைசெய்வாம் அரோ

10.

நெறிந்தில குழன்றில நீலம் ஏய்ந்தில
வெறிந்தில ஒளியில மேகத் தோடுஎதிர்
முறிந்துஎறி திரைஉவர்க் கடலை முற்றிழை
உறும்குழல் அழகினுக்கு உரைக்கல் ஆவதே

---

8. அத்தகைக் கும்பகன் - அப்படிபட்ட தகுதிகளை உடையகும்பகன் ; அரியமாதவம் - ஆற்றிய அரும்பெரும் தவம் ; இத்தகை உருஎன-இப்படிப்பட்டவடிவமுள்ளது என்று,காட்டலே என - எடுத்துக் காட்டுவதுபோல ; சித்திர வினைஞரும் திகைப்ப-ஓவியவல்லுநர்களும் திகைப்படைய ; ஓர்கொடி - ஒரு கொடிய னைய பெண் ; உத்தம இலக்கணமொடும்- சிறந்த அழகுடனும் ; உதித்தனள் - தோன்றினாள் ;

9. அப்பெணின் - அந்தப்பெண்ணின் ; உருவமும் அழகும்- வடிவும் எழிலும் ; ஆசறு - குற்றமற்ற , செப்பமும் - ஒப்புரவும் ; மற்றுளதிறனும் - பிற ஆற்றல்களும் ; செப்பிடாது - கூறாது ; இப்படி விடுத்திடல் - இப்படியே விட்டுவிடுதல் ; எளியது ஆதல் இல் - எளிமையாதல் இன்மையால் ; ஒப்பனை - உவமை ; ஒரு சிறிது-ஒரு சிறிய அளவு ; உரைசெய்வோம்-கூறுவோம் ; அரோ - அசை ;

10. நெறிந்தில-சிலிர்த்துப் பறந்தில ; குழன்றில - சுருட்டை கொண்டில ; நீலம் ஏய்ந்தில-நீலநிறம் பொருந்தியிருக்கவில்லை ; வெறிந்தில - கலைந்திருக்க வில்லை ; ஒளியில - வெம்மை கொண்டிருக்கவில்லை; மேகத்தோடு-கார் மேகத்துடன் ; எதிர் முறிந்து-எதிர்த்துத் தோற்று ; எறிதிரை - அலைவீசும் ; உவர்க்கடலை - உப்பு நீர்க்கடலை ; முற்றிழை-சர்வாபரணபூஷிதை; உறும் குழல் அழகினுக்கு - பெற்ற கூந்தல் எழிலுக்கு ; உரைக்கலாவதே-கூறல் சரியாகுமா ;

11.

பாய்ந்தவல் இருளிடைப் பரிதி தன்ஒளி
வாய்ந்துபின் வளர்ந்து தேய்ந்துஒரு சின்மாற்றமும்
ஏய்ந்திடா மதியைஎன் மதியினால் இந்தக்
காந்தைதன் முகத்தினுக்கு எடுத்துக் காட்டுகேன்

12.

நேர்பட வளைந்துபின் நீளும் அன்றி
வீரர்கை இடைப்புகும் விறல்அற்று இற்றிடும்
மாரவேள் சிலைஅது என்றாலும் வாள்நகை
நாரிவாள் நுதற்குஎது நவிலற் பாலதே

13.

கறைஅறப் பொன்நிறம் காட்டித்தோன்றும் ஓர்
பிறைஉள என்னினும் பேசல் ஆவதுஓர்
முறைஉள என்னினும் முத்த வாள்நகை
சிறுநுதல் ஆம்எனத் திலகம் காட்டுமோ

---

11. பாய்ந்த வல்லிருளிடை - பரந்த கடும் இருட்டினிடை ; பரிதிதன் - சூரியனது ; ஒளிவாய்ந்து - ஒளியைப்பெற்று ; பின் வளர்ந்து- பின்பு நாள்தோறும் வளர்ந்தும் தேய்ந்தும் ; ஒரு சின் மாற்றமும் - ஒருசிறு மறுதலும் ; ஏய்ந்திடா - அடையாத ; மதியை - சந்திரனை ; என் மதியினால் - என்சிற்றறிவினால் ; இந்தக் காந்தைதன் - இந்தப் பெண்ணின் , முகத்தினுக்கு - முகத்துக்கு ; எடுத்துக்காட்டுகேன் - ஒப்பாக எடுத்துக் கூறேன் ;

12. நேர்பட வளைந்து - நேராக வளைந்து ; பின் நீளும் - பின்பு நீண்டு நிமிரும் ; அன்றியும் - அல்லாமலும் ; வீரர்கை யிடை - வீரர்கள்கையில் ; புகும் - சேரும் ; விறல் அற்று இற்றி டும் - வலிமையின்றி ஒடியும் ; மாரவேள் சிலை என்றாலும் - மன் மதனின் கரும்புவில் எனினும் ; வாள்நகை - ஒளிவீசும் புன்னகை யுடைய; நாரிவாள்நுதற்கு - இப்பெண்ணின் ஒளிவிடு நெற்றிக்கு; எது நவிலற்பாலதே - எவ்வாறு உவமையாகக் கூறப்பெறும் ;

13. கறையறப் பொன்னிறம் காட்டி - குற்றமற்ற பொன் வண்ணம் காட்டி ; தோன்றும் - காணும் ; ஓர் பிறைஉள என்னி னும்-ஒரு பிறைமதியுளதெனினும் ; பேசலாவது- கூறுவதற்குரிய ; ஓர் முறையுள என்னினும் - ஒரு நெறி உள்ளது என்றாலும்; முத்த வாணகை - முத்துப் போலொளிரும் பற்களையுடைய

14.

கருணையும் உலகுஅறி கணிப்பும் காட்சியின்
பொருள்நனி அறிதலும் ஒழிந்த பூவினை
வெருள்தரும் வாளினை வேலை நேரஇத்
திருவிழிக்கு உவமையாய்த் தெரித்தல் தீமையே

15.

அஞ்சனக் கோலினால் வளாவல் அன்னபொன்
வஞ்சிதன் புருவம்நாற் கவிகள் வாழ்த்திய
வெஞ்சரா சரம்என விளம்பற்கு ஏற்கிலம்
நெஞ்சகம் அதற்குஅது நிகர்அது ஆகுமே

16.

வருணமும் வடிவமும் அழகும் மன்றமும்
பொருவியது என்னினும் பூவை நாசிபோல்
மருவு இரண்டு அறிவரு மலர் எள்போதினை
உருவளர் குமிழினை உரைக்கல் ஆவதே

---

இவள் ; சிறுநுதலாம் என - சிறுநெற்றியாகும் என்று ; இலகும் காட்டுமோ - மேன்மையைக் காட்டுமா ;

14. கருணையும் - இரக்கமும்; உலகு அறிகணிப்பும் - உலக மக்களை அறியும் மதிப்பும்; காட்சியின் - பார்வையின்; பொருள்-விளக்கம் ; நனியறிதலும் - நன்கு தெளிதலும் ; ஒழிந்த - நீங்கிய; பூவினை - தாமரையை ; வெருள்தரும் - அச்சம் அளிக்கும் ; வாளினை வேலை - வேலையும் வாளையும் ; நேர - ஒப்பாக ; இத் திருவிழிக்கு - இவளுடைய விழிகட்கு; உவமையாய்த் தெரித்தல் - உவமைகூறல் ; தீமையே - கேடாகும் ;

15. அஞ்சனக் கோலினால் - மைதீற்றும் குச்சியால் ; வளாவல் அன்ன - வளைவுபடுதல் போல ; பொன்வஞ்சிதன் - பொற்கொடியாம் இவள் ; புருவம் - புருவங்கள் ; நாற்கவிகள் - நாலு வகைக் கவிஞர்களும் ; வாழ்த்திய - வாழ்த்துக்கூறிய ; வெம் சராசரம் என்ன - கொடிய அசைவுள்ள வில் என்று; விளம்பற்கு - கூறுதற்கு ; ஏற்கிலம் - சம்மதியோம் ; நெஞ்சகம் - மனத்து ; அதற்கது - அதற்கு அதுவே ; நிகரதாகும் - ஒப்பாகும் ;

16. வருணமும் வடிவமும் அழகும் மன்றமும் - நிறமும்

17.
பவளமும் கொவ்வையின் பழமும் பைந்தொடி
தவளமென் மூரல்வாய் தனக்குச் சாற்றுவர்
இவளவே அன்றிமற்று யாது கூறுவர்
குவளையாம் குமுதமும் உவமை கூறினே

18.
துளைபடா முத்தமும் முருந்தும் தோகைதன்
முளையெயிற் றினுக்குஇணை மொழிவர்
முன்னுளோர்
கிளைபடக் கோத்தபோது அன்றிக் கேழ்என
தளைபடும் யாப்பினிற் சாற்றல் ஆவதே

---

ரூபமும் எழிலும் வாசனையும் ; பொருவியதுஎன்னினும் - பெருந்தியதாயினும் ; பூவை - இப்பெண்ணின் ; நாசிபோல்-நாசியைப் போல ; மருவுஇரண்டறிவரு - விளங்கும், இரண்டாகத் தெரிய வரும் ; மலர் எட்போதினை ; மலரும் எள்பூவை ; உருவளர் - தோன்றிமறையும்; குமிழினை - நீர்க்குமிழியை ; உரைக்கலாவதே கூறஇயலுமோ ;

17. பவளமும் கொவ்வையின்பழமும்-நற்பவளமும் கொவ்வைக்கனியும் ; பைந்தொடி - பசுமையான வளையணிந்தவளின் ; தவள - வெண்மையான ; மென்மூரல் - மென்மையானபற்களுடைய ; வாய்தனக்கு - வாய்தனக்குஒப்பாக ; சாற்றுவர் - கூறுவார்கள் ; இவளவேயன்றி - இவ்வளவன்றி ; மற்றுயாது கூறுவர் - வேறுஎதைக் கூறுவர் ; கூறினே - சொன்னால் ; குவளையாம் குமுதமும் உவமை - செங்குவளையும், செங்குமுதமும் ஒப்பாம் ;

18. துளைபடா முத்தமும் - துளைக்கப்படாத நல்முத்தும்; முருந்தும் - வெண்குருந்தும் ; தோகைதன் - பெண்ணின் : முளை எயிற்றினுக்கு - முளைத்தபற்களுக்கு ; இணைமொழிவர் - ஒப்புக் கூறுவர் : முன்னுளோர் - முன்காலத்தவர் ; கிளைபடக்கோத்த போது - (அவை) வரிசையாகக் கோத்தபோது ; அன்றி - அல்லாமல்; கேழ்என - அழகுள்ளன என்; தளைபடும் - தளைகள்கூடிய ; யாப்பினில் - பாடலில் ; சாற்றல் ஆவதே - உரைக்க இயலுமோ ;

19.

ஒளியினில் கண்ணடி உவமை ஆயினும்
களிமயில் அனையவள் கபோலம் ஆம்எனில்
தெளிவில நறுமணம் சேர கிற்றில
அளியில ஆதலின் அறைதல் ஆசு அரோ

20.

நிலம்புரி தவம்என நின்ற நேரிழை
நலம்புரி கழுத்தினுக்கு உவமை நாட்டுஉறும்
வலம்புரி வளையொடு கமுகம் மாமணிப்
பொலம்புரி அணியொடு பொலிவது ஆகுமோ

21.

காம்புஎனில் தொளைபடும் கரும்புஅது என்றிடில்
ஆம்புரை யாதேனில் ஆலையுட்படும்
வேம்புஎனும் அமுதமும் மென்சொல் தோட்கிணை
நாம்பு கலரிதுஇனி நாடும் காலையே

---

19. ஒளியினில் கண்ணடி - ஒளிதருவதில் கண்ணாடி ; உவமையாயினும் - ஒப்பு ஆனாலும் ; களிமயிலனையவள் - களிக்கும் மயில்போன்றாள்; கபோலம் ஆம்எனில்-கன்னம் ஆகும் என்றால்; தெளிவில் - அதுதெளிவற்றது ; நறுமணம் சேரகிற்றில - நறிய வாசனை சேரப்பெற்றில ; அளியிலது ஆதலின் - குளிர்ச்சியின் மையால் ; அறைதல் - ஒப்பாகக் கூறுவது ; ஆசு - குற்றமாகும் ; அரோ - அசை ;

20. நிலம்புரிதவம்என - பூமிசெய்த தவப்பயன்என ; நின்ற- இருந்த ; நேரிழை - நல்லணிபூண்டவள் : நலம்புரிகழுத்தினுக்கு- அழகு செய்யும் கழுத்துக்கு; உவமை - ஒப்பு; நாட்டுறும்- நாட்டில் உள்ள; வலம்புரிவளையொடு- வலம்புரிச்சங்குடன் ; கமுகம் - பாக்குக்காய்; மாமணி - பெரியரத்தினங்கள் ; பொலம்புரி -தங்கத்தில் பதிக்கப்பெற்ற ; அணியொடு - ஆபரணங்களுடன் ; பொலிவதாகுமோ - விளங்குவது ஆகாது ;

21. காம்பு எனில் - மூங்கில் என்றால் ; தொளைபடும் - துளைபட்டிருக்கும் ; ஆம்புரை - ஆகும் ஒப்பு ; ஆது எனில் - ஆகும் எனில் , கரும்பென்றிடில் - கரும்பு என்றாலோ ; ஆலையுட்படும் - ஆலையுட்பட்ட ழியும் ; அமுதமும் - இன்னமுதமும் ;

வேறு

22.

விண்டென்கை பழுதே போல
மெல்லியல் தோட்கு வீணைத்
தண்டுஎன்கை பழுதே முன்கை
தனக்கு அஃது அன்றிவேறும்
உண்டுஎன்கை பழுதே மற்றும்
உளதுஎனின் நெற்கு நேர்மை
சண்டுஎன்கை அன்றி மற்றுந்
தான்என்கை பழுதே யாமால்

23.

பாந்தளின் வடிவம் என்னப்
பருவரைச் சாரல் மன்னும்
காந்தளைப் பவளம் நேர்ஆம்
கைக்கு ஒப்புக் காட்டல்ஆமோ
மாந்தளிர் மேனி யாள்தன்
மணிவிரல் அனங்கன் சாணை
தேய்ந்துஒளிர் வயிரம் என்னச்
சிறிது ஒப்புச் செப்பலாமே

---

வேம்பு எனும் மென் சொல் - வேம்புபோலாகும் என்னும் படியான இனிய மெல்லிய உரையினாள்; தோளுக்கு இணை - தோள்களுக்கு ஒப்பு ; நாடுங்காலை - ஆராயின் ; நாம்புகலரிது - எம்மால் உரைத்தற் கரிதாகும் ;

22. மெல்லியல் தோட்கு - மென்மையான இயல்பினள் தோள்களுக்கு ; விண்டு என்கை பழுதேபோல - உவமை கூறுவது என்பது குற்றமாவது போல ; முன்கை தனக்கு - முன் கரங்களுக்கு ; வீணைத்தண்டு என்கை பழுதே - ஒப்பு ; வீணைத்தண்டு என்பது குற்றமாகும் ; அஃது அன்றி - அதுவுமன்றி ; வேறும் உண்டென்கை - வேறும் உள்ளதென்பது ; பழுதே - குற்றமே ; மற்றும் உளது எனில் - வேறும் உள்ளது என்றால் ; நெற்கு - நெல்லுக்கு; நேர்மை - ஒப்பு; சண்டு என்கையன்றி - பதர் என்பது அல்லாமல் ; மற்றுந்தான் என்கை - மற்றும் பிற ஒப்பு என்பது ; பழுதேயாமால் - குற்றமாகும் ;

23. பாந்தளின் வடிவம் என்ன - பாம்பின் உருவைப்போன்;

24.
வட்டமாய்த் திரண்டு மேன்மேல்
வளர்ந்து அணிவரைகள் மேவிக்
கட்புலன் கதுவா வண்ணம்
கச்சின்உள் கரந்து பொன்போல்
மட்டுறு தேமல் ஆர்ந்த
மங்கைதன் தனங்கள் கையால்
தொட்டு அனுபவித்தால் அன்றிச்
சொல்வரோ துணைமற்று அம்மா

25.
பொருப்புஎன்பர் மோக வாரிப்
புற்புதம் என்பர் யானை
மருப்புஎன்பர் இளநீர் என்பர்
மணிக்குடம் என்பர் ஒன்றோ
உரைப்பர்கள் எற்றால் இந்த
உவமை கண்டனரோ தேறேன்
கருப்புர வாயாள் செவ்வி
காட்டிய காட்சி அன்றே

---

பருவரைச்சாரல் - பெரிய மலைப் பகுதியில் ; மன்னும் - விளங்கும் ; காந்தளை - காந்தள் மலரை ; பவளம் நேர் ஆம் - பவளத்துக்கொப்பான ; கைக்கு - கரங்களுக்கு ; ஒப்புக்காட்டலாமோ - உவமையாகக் காட்டல் சரியாகுமா ; மாந்தளிர் மேனியாள் தன் - மாவிலைத் தளிர் ஒத்த சரீரத்தை உடையவள் ; மணிவிரல் அழகிய விரல்கள் ; அனங்கன் - மன்மதன் ; சாணை தேய்ந்து - சாணைதீற்றி (பட்டைதீற்றி) ; ஒளிர் - பிரகாசிக்கும் ; வயிரம் என்ன - வைரமணி என ; சிறிது ஒப்பு - ஓரளவு உவமை; செப்பலாமே - சொல்லலாம் ;

24. வட்டமாய்த்திரண்டு - வட்டவடிவமாய்ச் செறிவுடன் திரட்சிபெற்று ; மேன்மேல் வளர்ந்து-மேலும் மேலும் வளர்ச்சி பெற்று ; அணிவரைகள் மேவி - அழகிய கோடுகள் பொருந்தி : கட்புலன் கதுவாவண்ணம் - கண்கள் பற்றிக் கவராதபடி ; கச்சினுள் கரந்து-இரவிக்கைக்குள் மறைந்து; பொன்போல்-தங்கத்தின் ஒளிபோல; மட்டுறு-அளவான; தேமல் ஆர்ந்த - பசலை பொருந்திய; மங்கைதன் தனங்கள்-பெண்ணின் முலைகள் ; கையால்-கரங்களால் ; தொட்டு - பரிசித்து ; அனுபவித்தாலன்றி - உணர்ந்தாலல்லது ; சொல்வரோ துணை மற்று-வேறு ஒப்புக் கூறுவார்களா? அம்மா - அசை ;

25. கருப்புரவாயாள் - பச்சைக் கர்ப்பூர மணநாறும் வாயி

26.

புன்நரம்பு இலகித் தோன்றும்
பூதவத் தளிரை அந்த
மின்வயிற் றினுக்கு நேர்மை
விளம்பினால் ஏற்கும் கொல்லோ
அன்னதே அன்றிக் காமர்
அணிமயிர் ஒழுக்கும் உண்டோ
மன்னும்மூ வரையும் உண்டோ
ஆதலின் மறுத்தது ஆம்ஆல்

---

ளன் ; செவ்வி - அழகை; காட்டிய காட்சி - எடுத்துகாட்டிய காட்சியை ; பொருப்பு என்பர் - மலை என்று கூறுவர் ; மோகவாரி - ஆசைக்கடலின் ; புற்புதம் என்பர் - குமிழி என்று கூறுவர் ; யானைமருப்பு என்பர் இளநீர் என்பர் - யானைத்தந்தம் என்பர் தெங்கின் இளநீர் என்றும் கூறுவர் : மணிக்குடம் என்பர் - அழகிய குடம் என்பார்கள் ; ஒன்றோ உரைப்பார்கள் - ஒரு உவமையா கூறுவார்கள்; எற்றால் - எதனால் ; இந்த உவமை கண்டவரோ - இவ்வொப்புக் கண்டார்கள்; தேறேன் - தெளிவு பெற்றிட மாட்டேன் ;

26. புன்நரம்பு இலகித் தோன்றும் பூதவத்தளிரை - சிறிய நரம்புகள் விளங்கிக் காட்சி தரும் ஆலின் இளந்தளிரை : அந்த மின்- அந்த மின்னல் அனைய பெண்ணின் : வயிற்றினுக்கு-உதரத்துக்கு ; நேர்மை - ஒப்பு : விளம்பினால் - கூறினால் ; ஏற்கும் கொல்லோ - ஏற்புடைத்தாகுமோ ; அன்னதேயன்றி - அதுவுமன்றி ; காமர் அணி மயிர் ஒழுக்கும் உண்டோ - விரும்பத்தக்க அழகிய ரோம ஒட்டம் உள்ளதா ; மன்னும் - பொருந்திய ; மூவரையும் உண்டோ - மூன்று கோடுகள் உள்ளதா ; ஆதலின் - அதனால் ; மறுத்ததாம் - ஒப்புக்கொள்ள மறுத்ததுவாம் ; ஆல் - அசை ;

27.

இடைஅறப் பணைத்த கொங்கை
ஏந்திழை இடையை எண்ணின்
நடைபெறில் துவழ்த லானே
நாகிள வஞ்சி போலாம்
வடிவிடைச் சுருங்க லானே
மணிஅணித் துடியும் ஆகும்
தடிஎனல் ஆகும் தோன்றி
மறைதலில் தானை தன்னால்

28.

மல்குநீர்க் கடலில் வந்த
மலர்மகள் அனைய நங்கை
அல்குலைத் தேன்போது என்ன
ஆனந்த நிலையம் என்னச்
சொல்குவது அன்றி நச்சுந்
துளைஎயிற்று அரவம் என்ன
நல்குதல் உவமை என்னோ
நாற்கவிப் புலவர் நாடி

---

27. இடையற - இடுப்பு அற்று விழுமாறு; பணைத்த - பருத்த; கொங்கை - முலைகளுடைய; ஏந்திழை - பெண்ணின்; இடையை எண்ணின் - இடுப்பை நினைக்கின்; நடைபெறில் - நடப்பதனால்; துவழ்தலாலே - துவண்டு போவதால்; நாகிள வஞ்சி போலாம் - மிகவும் இளசான கொடிபோன்றதாகும்; வடிவிடைச் சுருங்கலாலே - மேனியின் நடுப்பகுதியில் மெலிந்திருப்பதால்; மணியணித்துடியும் ஆகும் - மணிகள் பதித்த உடுக்கை போலாகும்; தானைதன்னால் - புடவையில்; தோன்றி மறைதலில் - தெரிந்தும் தெரியாமலும் இருப்பதால்; தடிஎனலாகும் - மின்னலைப் போலவும் ஆகும்;

28. மல்குநீர்க் கடலில் வந்த - நீர்நிறைந்த திருப்பாற் கடலில் தோன்றிய; மலர்மகள் அனைய - இலக்குமிபோன்ற; நங்கை - பெண்ணின்; அல்குலை - நிதம்பத்தை; தேன் போது

29.

அறம்புரை செவ்வித் தாய
அமிழ்தினும் இனிய நங்கை
குறங்கினிக்கு அரம்பை தன்னைக்
கூறிடில் உவமை கோவம்
நிறம்பிறிது ஆவது இன்றி
நெகிழ்தரும் மென்மைத்து ஆகி
பிறங்குஒளி அடையா சில்நாள்
பெயர்வுழிச் சருகாம் அன்றே

30.

முற்றடி பரந்த கொங்கை
முகிழ்நகை கருங்கட் செவ்வாய்
சிற்றடிக்கு உவமை யாகச்
செயலையின் தளிரைச் செய்ய
பொற்றசெங் கமலப் போதை
புகலுதும் என்னிற் பூவில்
உற்று அவை வருதற் பாற்றோ
ஆதலால் உவமை ஆமோ

---

என்ன - தேன் அடை என ; ஆனந்தநிலையம் என்ன - இன்பத்தின் இருப்பிடம் என ; சொல்லுவதன்றி - கூறுவதன்றி ; நாடி - தேர்ந்து ; நாற்கவிப்புலவர் - நால்வகைக் கவிபுகலும் அறிஞர்கள் ; நச்சுத்துளை எயிற்று அரவம் என்ன - துளைபொருந்திய விடப்பற்களை உடைய பாம்பு என ; நல்குதல் உவமை - ஒப்பாகக் கூறல் ; என்னோ - ஏனோ? ;

29. அறம்புரை - தருமம் ஒத்த ; செவ்வித்தாய - அழகுடைய ; அமிழ்தினும் இனிய நங்கை - தேவாமிர்தத்தைவிட இனிமையுள்ள பெண்ணின் ; குறங்கினுக்கு - துடைகளுக்கு ; அரம்பைதன்னை - வாழைமரத்தை; கூறிடில் உவமை- ஒப்புக் கூறின்; கோவநிறம் - பொன்நிறம் ; பிறிதாவதின்றி - மாறுபடுவதின்றி ; நெகிழ்தரும் - தளர்வுறும் ; மென்மைத்தாகி - மென்மைத் தன்மையுடையதாய் ; பிறங்கொளி அடையா - விளங்கும் ஒளியடையாமல் ; சின்னாள் பெயர்வுழி - சிலநாள் செல்லின் ; சருகாம் - சருகாகிவிடும் ;

30. முற்றடி பரந்த கொங்கை - அடிப்பகுதி முழுதும் பரவிய

31.

செயிர்இல்பொன் தகட்டில் தூய
திரள்மணிக் கொம்பர் சேர்த்து
வெயில்ஒளி கிளைப்ப நன்கு
வேகடம் செய்த பத்து
வயிரமா மணிகள் உச்சி
வரம்பிடைப் பதித்தது அன்ன
குயின்அக அடிக்கு யாதைக்
கூறுதும் குணம்கொண்டு அம்மா

---

தனங்களுடைய ; முகிழ் நகை - அரும்பனைய பற்களுடைய ; கருங்கட் செவ்வாய் - கரிய விழிகளும் சிவந்தவாயுமுடையாளின் ; சிற்றடிக்கு - சிறியபாதத்துக்கு ; உவமையாக - ஒப்பாக; செயலையின் தளிரை - அசோக மரத்தளிரையும் ; செய்ய - சிவந்த ; பொற்ற - பொன்னனைய ; செங்கமலப்போதை - செந்தாமரை மலரையும்; புகலுதும் என்னில்- கூறுவோமானால் ; பூவில் உற்று- பூமியிற்பொருந்தி ; அவை - அவ்வுவமைப் பொருட்கள் ; வருதற் பாற்றோ - நடந்து வருதலாகுமா ; ஆதலால் - அதனால் ; உவமையாமோ - ஒப்பாகுமோ ;

31. செயிர்இல் - குற்றமற்ற ; பொன்தகட்டில் - தங்கத் தகட்டில் ; தூய - பரிசுத்தமான ; திரள் - திரண்ட, நெருங்கிய ; மணி-அழகிய ; கொம்பர் சேர்த்து-கொம்புகளிற் கலந்து; வெயில் ஒளி கிளைப்ப - சூரியவெப்பம் ஒளிபடரும்படி ; நன்கு வேகடம் செய்த-நன்கு அழுக்ககற்றிய ; பத்து வயிரமாமணிகள் - பத்து வைரக் கற்கள் ; உச்சி வரம்பிடை - உச்சியின் எல்லையில் ; பதித்தது அன்ன - பதியவைத்தது போன்று ; குயின்அக வடிக்கு - செய்த நகங்களுடைய இருவடிக்கு ; யாதைக்கூறுதும் - எதை ஒப்பாகக் கூறுவோம் ; குணம்கொண்டு - சீரமைகொண்டு; அம்மா - அசை;

32.
தோலடிச் சுவடு காட்டும்
துறைப்புனல் அன்னம் என்னில்
மாலடி வண்ணம் வட்ட
வடிவமாம் பிடியை ஓதில்
காலடி வைப்பிற்கு ஒவ்வா
தனஎனில் தென்றல் காற்று
போல்அடி வைப்பாள் தூய
நடைக்கு எதுபுகலற் பாற்றே

33.
புவிஇன்பம் பொருந்த வந்த
பொற்கொடி புகலும் சொற்குச்
செவிஇன்பம் பொருந்தும் யாழின்
தீஞ்சுவை நிகரா வேனும்
அவிஇன்பம் நுகரும் தேவர்
அமிழ்தினும் இனிய கம்பன்
கவிஇன்பம் என்ன உள்ளம்
கலந்துஇன்பம் காட்டும் அன்றே

---

32. தோலடிச் சுவடுகாட்டும் - தோலேபாதமாக அடையாளம்காட்டும் ; புனல்துறை நீர்த்துறையில் உள்ள ; அன்னம் என்னில் - அன்னம் எனக்கூறின் ; மாலடி வண்ணம் வட்டவடிவமாம் பிடியை ஓதில் - பெரிய வட்ட வடிவமாம் கால்களுடைய பெண்யானையைக் கூறின் ; காலடிவைப்பிற்கு - இவள் கால் அடி பெயர்த்து வைக்கும் அழகிற்கு ; ஒவ்வாதனஎனில் - ஒப்பாகாது என்றால் ; தென்றல் காற்று போல் - மந்தமாருதம் போல ; அடி வைப்பாள் - அடியெடுத்து மெல்ல வைக்குமிவள்; தூய நடைக்கு - குற்றமற்ற நடைக்கு ; எதுபுகலற்பாற்று - எது உவமை கூறத் தக்கது ;

33. புவி இன்பம் பொருந்த வந்த - இந்தப்பூமியில் மகிழ்ச்சி நிலவத் தோன்றிய ; பொற்கொடி - பொன் கொடியனையாள் ; புகலும்சொற்கு - பேசும் வார்த்தைகளுக்கு ; செவி இன்பம் பொருந்தும் - காதுகளுக்கு இன்பமளிக்கும் ; யாழின் - வீணையின் ; தீஞ்சுவை - இன்சுவை ; நிகராவேனும் - ஒப்பாகாது ஆயினும் ; அவி இன்பம் நுகரும் தேவர் அமிழ்தினும் - உணவாகத் தேவர்கள் உண்ணும் அமிழ்தைவிட ; இனிய - இனிமைதரும் ; கம்பன்

**34.**

இம்பரின் அழகு வாய்ந்த
இக்கொடி தன்னை ஈன்ற
கும்பகன் அளவி லாத
கோநிரைக் கூட்டம் தன்னுள்
வெம்புஅடல் கால நேமி
விறல்சுதர் எழுவர் விண்தோய்
கொம்புஅடல் கிரிஆன் ஏறாய்க்
குலவினர் கொண்மூ என்ன

**35.**

அருந்தவர் சாபம் தன்னால்
ஆசுர உருவம் நீத்த
பெருந்திமில் இடபம் ஏழும்
பிறங்குளரி கனல்கண் கால
வருங்கரும் கோட்டுச் சாரல்
மலைஎன மருவி எங்கும்
அருந்தளைப் பழனப் பைங்கூழ்
அழித்தன செருக்குற்று அம்மா

---

கவி இன்பம் என்ன - கம்பன் அருளிய கவிதைகளினால் ஏற்படும் மகிழ்ச்சி போல ; உள்ளங்கலந்து - மனத்திற்கலந்து ; இன்பம் காட்டும் - மகிழ்ச்சிதரும் ; அன்றே - அல்லவா ;

34. இம்பரில் - இவ்வுலகில் ; அழகு வாய்ந்த - எழில் பொருந்திய ; இக்கொடி தன்னை ஈன்ற - இந்தக் கொடி போன்ற வளைப்பெற்ற ; கும்பகன் - கும்பகன் என்ற பெயரினான் ; அளவிலாத - கணக்கற்ற ; கோநிரைக் கூட்டந்தன்னுள் - பசுமந்தைகளிடையே ; வெம்படல் காலநேமி - காலநேமி என்னும் கொடியவனுடைய ; விறற்சுதர் எழுவர் - ஏழுவலிமை மிக்க மைந்தர்கள் ; விண்தோய் - வானை எட்டும் ; கொம்பு அடல்கிரி - வலிய கொம்புகளை உடைய மலைபோன்ற ; ஆன் ஏறாய் - காளைகளாய் ; கொண்மூ என்ன - மேகம் போல ; குலவினர் - சேர்ந்திருந்தனர் ;

35. அருந்தவர் சாபம் தன்னால் - அரிய தவத்தினர் சாபத்தால் ; ஆசுர - அசுர ; உருவம் நீத்த - வடிவம் மாறிய; பெருந்

36.

கால்நிலம் கீறச் செய்ய
        கடைவழி கனலி கால
மாநிலம் இருப்புக் கோட்டால்
        வகிர்படக் குத்தி வாரி
தான்எதிர்ப் பட்டார் தம்மைச்
        சாடிவின் சார நூறி
ஊன்உடை உயிர்கள் அஞ்ச
        உரப்புஉறும் உருமின் அம்மா

---

இமில் – பெரிய இமில் உடைய; இடபம் - விடைகள்; ஏழும்-ஏழு என்னப் பெற்றவையும்; பிறங்கு எரிகனல்-விளங்கி எரியுந் தீ; கண் கால-விழிகள்கக்க; வரும் கருங்கோட்டுச் சாரல் மலை என - கரிய சிகரங்கள் கொண்ட மலைப்பகுதியில்: மலைஎனமருவி - மலை போலத்திரிந்து: எங்கும் - எல்லா இடத்தும்; அரும்தளைப்பழனப் பைங்கூழ் - அருமையான தழைகள் செறிந்த வயலிலுள்ள பயிர் களை: செருக்குற்று - மதம் கொண்டு; அழித்தன - மேய்ந்தும் துகைத்தும் பயனற்றதாக அழித்தன;

36. கால் நிலம் கீற - கால்களால் பூமியைக் கீறி, மண்ணை இறைத்து; செய்ய கடைவிழி - சிவந்த கடைக்கண்களில்; கனலி கால - தீ கக்க; மாநிலம் - மண்ணை; இருப்புக் கோட்டால் - இரும்பனைய கொம்புகளால்; வகிர்பட - பிளவுபட: குத்தி - முட்டி; வாரி - எடுத்தும்; தான் எதிர்ப்பட்டார் தம்மைச் சாடி- தன் எதிர் காணப்பெற்றவர்களை எல்லாம் தாக்கி: விண்சார நூறி - மேலுலகம் அடைய அழித்து; ஊனுடை உயிர்களஞ்ச - வடிவமுள்ள ஜீவராசிகள் பயமுற: உரப்புறும் உருமின் - இடி போல ஒலி எழுப்பும்; அம்மா-அசை;

37.

நந்தன வனங்கள் சாய்த்து
  நறுமலர் மரங்கள் மாய்த்து
மந்தர மலையின் எங்கும்
  வலம்இடம் திரிந்து காண்போர்
நொந்தனர் இரியத் தாக்கி
  நொறில்வயப் புலிஏறு என்ன
செந்துகள் கெழுமத் தாவிச்
  செருக்கின சேஓர் ஏழும்

38.

தருக்கின திரியும் அந்தத்
  தறுகண்மால் விடைஓர் ஏழின்
செருக்குஅறத் தீர்ப்பான் நாடிச்
  செருமுக வயவர் தம்மை
எருக்கிநீர் உறுதிர் என்ன
  ஏவினன் இசைவண்டு ஆர்க்கும்
மருக்கிளர் சோலை சூழ்ந்த
  மிதிலைநாட்டு அரசன் மன்னோ

---

37. நந்தன வனங்கள் சாய்த்து-பூஞ்சோலைகளை அழித்து: நறுமலர் மரங்கள் மாய்த்து - வாசனை தரும் மலர் மரங்களை அழித்து ; மந்தர மலையின்- மந்தரக்கிரிபோல; எங்கும் - அனைத் திடத்தும் ; வலமிடந்திரிந்தும் - வலப்பக்கம் இடப்பக்க மாகச் சுற்றி அலைந்தும் ; காண்போர் - கண்ணில் தெரிந்தவர் களை எல்லாம் ; நொந்தனர் இரிய - வருந்தினவர்களாய் ஓடி மறைய; தாக்கி - அடித்து (முட்டி): நொறில் வயப்புலி ஏறென்ன- வேகமாகப்பாயும் புலி போல : செந்துகள் - உயிரினங்கள் ; கெழும - நிறைய ; தாவி - தாண்டி ; சே ஓர் ஏழும் - ஏழுகாளை களும் ; செருக்கின - மதம் கொண்டு அலைந்தன ;

38. தருக்கினதிரியும் அந்தத் தறுகண்மால் விடை ஓர் ஏழின் -

**39.**

அப்பணி தலைமேற் கொண்ட
        அடல்கெழு வயவர் ஆர்த்துக்
கப்பணம் உலக்கை ஆதி
        கனற்படை கையில் ஏந்திப்
பைப்பணி என்னச் சீறி
        பருவரைக் கிரிஏறு அன்ன
மெய்ப்பெரு விடையைச் சூழ்ந்தார்
        விறற்புலி ஏறு மான

---

மதர்த்து அலையும் அந்த சினம் மிக்க பெரிய ஏழுகாளைகளின் ; செருக்கறத்தீர்ப்பான் - வலிமை முற்றும் அழிக்கும் பொருட்டு; செருமுகவயவர் தம்மை நாடி - போரில் வல்லவீரர்களை அழைத்து ; இசைவண்டு ஆர்க்கும் - வண்டுகள் இசை பொருந்த சிங்காரம் செய்யும் ; மருக்கிளர்- வாசனை பொருந்திய; சோலை- பூங்காக்கள் ; சூழ்ந்த - சுற்றிலும் நிறைந்த : மிதிலைநாட்டரசன்- மிதிலையைத் தலைநகரமாகக் கொண்ட நாட்டு மன்னன் ; எருக்கி நீர் உறுதிர் என்ன - கொன்று வாருங்கள் என்று ; ஏவினன் - உத்தரவிட்டான் ; மன்னோ - அசை ;

39. அப்பணி தலைமேற்கொண்ட - அந்த ஆணையைச் சிரமேல் ஏற்ற ; அடல்கெழுவயவர் - போர்வீரர்கள் ; ஆர்த்து - ஆரவாரம் செய்து; கப்பணம்உலக்கை ஆதிகனற்படை-கைவேல், உலக்கை முதலிய சுடர்விடும் ஆயுதங்கள் ; கையில் ஏந்தி - கைக் கொண்டு; பைப்பணிஎன்ன-படஅரவம் போல; சீறி - கோபித்து; பருவரைக் கிரி ஏறன்ன-பெரியமலையில் உள்ள பாறைகள் போல; மெய்ப்பெரு - உடல் பெற்ற ; விடையை - காளைகளை ; விறல் புலியேறு - வலிமிக்க ஆண்புலிகள் ; மான-ஒப்ப ; சூழ்ந்தார் - வளைந்தனர் ;

40.

சூழ்ந்தனர் பாசம் வீசித்
தோமரம் கொண்டு மோதிப்
போழ்ந்தனர் குடாரம் தன்னால்
புடைத்தனர் உலக்கை ஓச்சி
வீழ்ந்தனர் சிலவர் அஞ்சி
வெருண்டனர் சிலவர் வீரம்
தாழ்ந்தனர் சிலவர் ஓடித்
தப்பினர் சிலவர் அன்றே

41.

ஆர்த்தது குரம்பால் எற்றி
அதிர்த்தது நிலத்தைக் கொம்பால்
கோர்த்தது சிலரைக் குத்திக்
கொன்றது சிலரைக் கண்ணால்
பார்த்தது சிலரை வாலால்
படுத்தது சிலரைப் பாய்ந்திட்டு
ஈர்த்தது சிலரைக் காண்போர்
எஞ்சிட விடைகள் ஏழும்

---

40. சூழ்ந்தனர் - அப்படிச் சூழ்ந்த வீரர்கள் ; பாசம் வீசி - கயிறுகளை வீசி ; தோமரம் கொண்டு மோதி - கைவேலால் தாக்கினர் ; குடாரம் தன்னால் - கோடாலியால் ; போழ்ந்தனர் - பிளந்தனர் ; புடைத்தனர் உலக்கை ஓச்சி தண்டால் ஓங்கியடித் தனர் ; வீழ்ந்தனர் சிலவர் - சிலர் தரையில் விழுந்தனர் ; அஞ்சி வெருண்டனர் சிலவர் - பயந்து நடுங்கினர் சிலர் ; வீரம் தாழ்ந் தனர் சிலவர் - பலம் குறைந்தனர் சிலர் ; ஓடித்தப்பினர் சிலவர் - ஓடி ஒளிந்து பிழைத்தார்கள் சிலர் ; அன்று ஏ- அசை; அப்போதே என்றும் கொள்ளலாம் ;

41. ஆர்த்தது - எக்களிப்புச் செய்தன ; குரம்பால் எற்றி

42.

தாள்அற்றுக் கிடந்தார் சில்லோர்
தலையற்றுக் கிடந்தார் சில்லோர்
வாள்அற்றுக் கிடந்தார் சில்லோர்
வலிஅற்றுக் கிடந்தார் சில்லோர்
நாள்அற்று வீரம் அற்று
நகைஅற்று நாணும் அற்று
கேள்அற்றுக் கிடந்தார்க்கு எல்லை
கிளப்பதற்கு அரியது அம்மா

---

அதிர்த்தது நிலத்தை - குளம்புகளால் உதைத்து நிலம் அதிரச் செய்தன; கொம்பால் குத்திக் கோர்த்தது சிலரை - சிலவீரர்களைக் கொம்புகளினால் குத்திக் கோத்தெடுத்தன; கொன்றது சிலரை - சிலவீரர்களைக் கொன்றன; கண்ணாற் பார்த்தது சிலரை - சில வீரர்களை விழிகளால் குறிபார்த்தன; வாலாற்படுத்தது சிலரை - சிலவீரர்களை வாலாலடித்தழித்தன; பாய்ந்திட்டு - பாய்ந்து; ஈர்த்தது சிலரை - சிலவீரர்களை இழுத்தன; விடைகள் ஏழும் - ஏழுகாளைகளும்; காண்போர் எஞ்சிட - தூர நின்று பார்த்தவர்களே மிஞ்சி இருக்க;

42. தாள் அற்றுக் கிடந்தார் சில்லோர் - சிலர் கால் ஒடிந்து கிடந்தனர்; தலை அற்று - தலை அறுபட்டு முண்டமாக; கிடந்தார் சில்லோர் - வீழ்ந்து கிடந்தனர் சிலர்; வாள் அற்றுக்கிடந்தார் சில்லோர் - ஒளி இழந்து பயந்து இருந்தனர் சிலர், வாள் இழந்து என்றும் கொள்க; வலியற்றுக் கிடந்தார் சில்லோர் - பலம் இழந்து சிலர் கிடந்தனர்; நாள் அற்று - வாழ்நாள் இழந்து; வீரம் அற்று - வீரம் இழந்து; நகையற்று - பற்களிழந்து; நாணும் அற்று-வெட்கமும் இழந்து; கேளற்று - கேட்பாரின்றி (சுற்றம் இழந்து); கிடந்தார்க்கு - வீழ்ந்து கிடந்தவர்களுக்கு; எல்லை - வரம்பு(முடிவு); கிளப்பதற்கரிய - கூற இயலாது; அம்மா - அசை

43.

பட்டவர் ஒழிய மீண்டு
படாதவர் உரைப்பக் கேட்ட
மட்டவிழ் அலங்கல் மோலி
மன்னவன் குணிக்கல் ஆற்றாக்
கொட்டிலுக்கு அதிபன் ஆன
கும்பகன் தன்னைக் கூவி
எட்டினுள் ஒன்று நீத்த
எருதினை அடக்குக என்றான்

44.

பழனமும் பசுந்தண் காவும்
படுத்தன பாழாம் வண்ணம்
உழவர்கள் ஒருங்கு மாய்த்த
உலப்பி லாஉறு செய்வ
மழவிடை அனைத்தும் பற்றி
வலித்திலை யாயின் நண்ப
அழகுடைத்து அன்றால் தீமை
அன்றியும் பழிமற்று ஆம்ஆல்

---

43. பட்டவர் ஒழிய - இறந்தவர்போக ; மீண்டு படாதவர் - இறவாதார் திரும்பவந்து ; உரைப்பக்கேட்ட - கூறக்கேட்ட ; மட்டவிழ் அலங்கல் - வாசனை வீசும் மலர் மாலையும் ; மோலி - மகுடமுடைய ; மன்னவன் - மிதிலை மன்னன் (வெகுலாசுவன்); குணிக்கலாற்றா - கணக்கிடவியலாத ; கொட்டிலுக்கு - தொழுவங்களுக்கு ; அதிபனான - தலைவனாகிய ; கும்பகன் தன்னைக் கூவி - கும்பகனை அழைத்து ; எட்டினுள் ஒன்று நீத்த - ஏழு : எருதினை - காளைகளை ; அடக்குக-என்றான் ஒடுக்குக எனக் கூறினான் ;

44. பழனமும் பசுந்தண்காவும் - வயல்களையும் சோலை

45.

தவத்தினால் வந்து தோன்றும்
தனையர்கள் எனினும் அன்னோர்
அவத்தொழில் புரியின் ஒல்லை
அகற்றுதல் அறத்து ஆறாம்ஆல்
பவத்தொழில் இயற்றில் தெய்வப்
பசுவையும் படுத்தல் ஆகும்
எவர்க்கும்ஈது அடுப்பது அன்றோ
என்றனன் இகல்ஏறு அன்னான்

---

களையும்; பாழ் ஆம் வண்ணம் - பழாகும்படி; படுத்தன - அழித்தன; உழவர்கள் - விவசாயிகளை; ஒருங்கு - ஒருசேர (ஒன்றாக); மாய்த்த - கொன்றன; உலப்பிலா - கணக்கற்ற; உறு செய்வ - இடர் செய்வனவாகிய; மழவிடையனைத்தும் - இளைய எருதுகள் எல்லாம்; வலித்திலையாயில்- பிடித்துக் கட்டவில்லை எனில்; நண்ப-நண்பனே, அழகு உடைத்து அன்றால் - அழகன்று; இசையன்றியும் - இசைவல்லாமலும்; பழியாம் - வீண்பழியுமாகும்; மற்று, ஆம், ஆல் - அசை;

45. தவத்தினால் வந்து தோன்றும் தனையர்கள் எனினும்- தவம்செய்து பெற்ற பிள்ளைகளாயினும்; அன்னோர் - அவர்கள்; அவத் தொழில் புரியின் - தீயவை ஆற்றின்; ஒல்லை - உடனே; அகற்றுதல் - நீக்குதல்; அறத்தாறு ஆம் - தர்ம நெறியாகும்; பவத்தொழில் இயற்றில் - அழிவுச் செயல் புரியின்; தெய்வப் பசுவையும் படுத்தலாகும் - தெய்வத் தன்மையுள்ள பசுவையும் கொல்லலாம்; எவர்க்கும் - அனைவருக்கும்; ஈது அடுப்பதன்றோ- இது உற்ற செயலாம்; என்றனன் இகல் ஏறன்னான்- எனக் காளை புரைய வலிமையான் கூறினான்; ஆல்-அசை;

46.

என்றசொல் கேட்ட லோடும்
ஏற்றன புரிவல் என்ன
குன்றுஉறழ் வலிய கோட்டுக்
கொலைக்குடம் சூட்டு ஓர்ஏழை
வென்றுஎதிர் தாக்கித் தாம்பால்
வீக்கினும் வீரம் எஞ்சக்
கொன்றுஅடல் விளைத்தார் ஏனும்
கொடுப்பல் என்மகளை என்றான்

47.

செப்பினை நிகர்த்த கொங்கை
செழுமணிக கமலச் செங்கண்
துப்பினை நிகர்ந்த செவ்வாய்
துடிநிகர் மருங்குல் கொண்டாள்
ஒப்பினை உரைத்தற்கு ஏலா
உருவத்தாள் ஆய நங்கை
நப்பினை மணத்தை நாடி
நண்ணினர் நண்ணல் ஆவார்

---

46. என்றசொல் கேட்டலோடும் - இவ்வாறுரைத்தவார்த்தைகள் கேட்டவுடன் ; ஏற்றன புரிவல்என்ன-இயைந்தவை செய்வேன் என்று ; குன்றுஉறழ்-மலைஎனத்திரியும்; வலியகோட்டு பலமுள்ள கொம்புகள் கொண்ட ; கொலைக் குடஞ்சூட்டு ஓர் ஏழை - கொலைத்தன்மையுள்ள ஏழு மாடுகளை ; வென்று எதிர் தாக்கி-எதிர்த்துத் தாக்கி வெற்றிகொண்டு; தாம்பால் வீக்கினும்-கயிற்றால் பிணித்தாலும் ; வீரம்எஞ்ச - தங்கள் வீரம் நிலைத்திருக்க : கொன்றடல் விளைத்தாரேனும் - கொன்று வெற்றி கண்டாராயினும்(அவருக்கு); கொடுப்பல் என்மகளை-என் புதல்வியைத் திருமணம் செய்து கொடுப்பேன்; என்றான் - எனக் கூறினான்;

47. செப்பினை நிகர்த்தகொங்கை - சிமிழை ஒத்த முலை

48.

பாய்வயப் புலி ஏறென்னப்
    படுமதக் கரிஏறு என்ன
தாய்வரும் மறிஏறு என்னத்
    தருக்கினர் தறுகண் குன்றில்
காய்விடைக் கணத்தைச் சூழ்ந்து
    களித்தனர் பாசம் வீசிச்
சாய்தர உலக்கை ஓச்சித்
    தாக்கினர் தடக்கை தன்னால்

---

கள் ; செழு மணிக்கமலச் செங்கண் - செழித்து விரிந்த அழகிய தாமரை ஒத்த விழிகள் ; துப்பினை நிகர்த்த செவ்வாய் - பவளத்தை ஒத்த சிவந்தவாய் ; துடிநிகர் மருங்குல் - உடுக்கை ஒத்த இடை ; கொண்டாள் - கொண்டவள் ; ஒப்பினை உரைத்தற்கு ஏலா உருவத்தாள் - உவமை கூறற்கியலாத வடிவழகினள் ; ஆய - ஆகிய; நங்கை|நப்பின்னை - நங்கையாம் நப்பின்னை; மணத்தை நாடி - திருமணம் புரிதலைவிரும்பி; நண்ணினர் நண்ணாவார். சேராதவர்களும் சேர்ந்தனர் ;

48. பாய்வயப் புலியேறன்ன - பாயும் ஆண்சிங்கம் என ; படுமதக்கரி ஏறு என்ன - மதம் பொழியும் களிறு என ; தாய்வரு மறி ஏறென்ன - தாவிவரும் ஆண்குதிரை என ; தருக்கினர் - எழுந்தனர் ; தறுகண் குன்றில் - குரூரமான மலை ஒத்த ; காய்விடைக் கணத்தை - கோபமிக்க காளைக் கூட்டத்தை ; சூழ்ந்து - சுற்றி ; பாசம் வீசிக் களித்தனர் - கயிறு வீசி மகிழ்வுற்றனர் ; தடக்கை தன்னால் - அகன்ற கரத்தால் ; உலக்கை ஓச்சி - உலக்கையை எறிந்து; சாய்தர - கீழே சாயுமாறு ; தாக்கினர் - அடித்தனர் ;

49.

வெருண்டன விடைகள் ஏழும்
　　வெடித்தவால் எடுத்து வீசி
வகிர்ந்து எதிர்ப்பட் டார்தம்மை
　　மடித்தன வந்தோர் எல்லாம்
புகுந்தனர் மறலி வாழ்தென்
　　புலத்திடைப் பொதுவர் கோமான்
மகிழ்ந்திலன் செய்வது என்என்று
　　உளத்திடை மதித்தான் மன்னோ

50.

நாறுஇணர் முல்லைப் பைந்தார்
　　நந்தகோன் தனக்குஎன் நங்கை
ஊறுஇலா மணத்துக்கு இங்கண்
　　உறுகநின் கிளையோ டென்ன
மாறிலாத் தூதர்க்கு ஓலை
　　வரைந்தனன் விடுப்ப அன்னோர்
பாறுஎனும் படியே சென்று
　　பணிந்தனர் பகர்ந்தார் மன்னோ

---

49. வெருண்டன விடைகள் ஏழும் - ஏழுகாளைகளும் மருண்டன ; வெடித்தவால் எடுத்து - நீண்ட வாலை உயர்த்தி ; வீசி - சுழற்றி ; வகிர்ந்து எதிர்ப்பட்டார் தம்மை - எதிரே காணப் பட்டவர்களைப் பிளந்து ; மடித்தன - கொன்றன ; வந்தோர் எல்லாம் - எதிர்த்து வந்தவர்களனைவரும் ; மறலிவாழ் - யமன் வாழும் ; தென்புலத்திடை - யமலோகத்தில் ; புகுந்தனர் - சென்றனர் ; பொதுவர் கோமான் - ஆயர்தலைவன் ; மகிழ்ந்திலன் - மகிழ்ச்சியடையவில்லை ; செய்வது என் என்று - என்ன செய்வது என ; உளத்திடை - மனத்தில் ; மதித்தான் - நினைத்தான் ; மன் ஓ - அசை ;

50. நாறு இணர் முல்லைப் பைந்தார் - வாசனையுடைய

51.

தூதர்தம் உரையும் ஓலைச்
சுருளிடை உரையும் நோக்கி
ஆதரம் பெருகச் செங்கண்
அம்புய மனையா னோடும்
சீதள மதியம் அன்ன
சேயொடு கிளையும் சேரப்
போதுஅவிழ் பொழில்கள் சூழ்ந்த
பொன்மதில் மிதிலை புக்கார்

---

முல்லையரும்பு மாலை புனைந்த ; நந்தகோன் தனக்கு - நந்த கோபனுக்கு ; என்நங்கை - என்மகள் ; ஊறிலா மணத்துக்கு - குற்றமற்ற திருமணத்துக்கு ; இங்கண் - இவ்விடம் ; உறுக நின் கிளையோடென்ன-உன் சுற்றத்தாருடன் வருக என்று ; மாறிலாத் தூதர்க்கு - விசுவாசமுள்ள தூதர்களிடம் ; ஓலை வரைந்தனன் விடுப்ப - ஓலை எழுதி அனுப்ப ; அன்னோர் - அவர்களும் பாறு எனும்படியே சென்று - பருந்துபோல விரைந்துசென்று ; பணிந் தனர் பகர்ந்தார் - வணங்கிக் கூறினர் ; மன் ஓ - அசை ;

51. தூதர்தம் உரையும் - தூதுவர் வசனங்களும் ; ஓலைச் சுருளிடை உரையும் - ஓலைச் சுருளில் உள்ள எழுத்துரையும் ; நோக்கி - கண்டு ; ஆதரம் பெருக - அன்பு நிறைந்து பொங்க ; செங்கண் அம்புய மனையானோடும் - சிவந்த தாமரைபோன்ற விழியானுடன் (கண்ணனுடன்) ; சீதளமதியமன்ன சேயொடும் - குளிர்நிலாவனைய பலராமனுடன் ; கிளையும் சேர - சுற்றமும் கூடவர; போதவிழ் பொழில்கள் சூழ்ந்த-மலர்விரிந்த சோலைகள் சூழ்ந்த ; பொன்மதில் மிதிலை புக்கார் - பொன்னாலாய மதில்களையுடைய மிதிலை நகரத்துப் போந்தனர் ;

52.

வந்தனன் நந்த கோன்தன்
மைந்தரோடு என்னத் தேர்ந்து
கொந்துஅவிழ் முல்லை மார்பன்
கொண்டு எதிர்குறுகிப் போற்றி
இந்திரன் மாடம் அன்ன
எழில்மனை இருக்கை ஈய்ந்து
தந்தனன் அடிசில் மற்றும்
தருவன இயற்றி னான்ஆல்

53.

கூற்றமும் வெருவும் கொட்பிற்
குலவும் ஏழுஎருதின் கொற்றத்து
ஆற்றலை அடக்கி என்றன்
அரும்பெறற் புதல்வி தன்னை
மாற்றரும் தகைசால் நின்றன்
மகற்கு அணிமணம் நன்காற்றித்
தேற்றரவு எய்து மாறுஎன்
சிந்தனை தவிர்த்தி என்றான்

---

52. நந்தகோன் தன்மைந்தரோடு - தன் புதல்வர்களுடன் நந்தகோபன் ; வந்தனன் - வந்துளான் ; என்னத்தேர்ந்து - என்ற றிந்து ; கொந்தவிழ் முல்லை மார்பன் - முல்லை மலர் மாலை சூடிய கும்பகன்; கொண்டெதிர் குறுகி- எதிர்கொண்டு அடைந்து; போற்றி - வணங்கி ; இந்திரன் மாடம் என்ன - இந்திரன் மாளி கையனைய ; எழில்மனை - அழகிய அரண்மனையில் ; இருக்கை ஈத்து - ஆசனம்முதலிய வசதியளித்து ; தந்தனன் அடிசில் - விருந் தளித்தான் ; மற்றும் தருவன - வேறும் உரியனவான எல்லாம் ; இயற்றினான் - புரிந்தான் ;

53. கூற்றமும் வெருவும் - யமனும் அஞ்சும்படி ; கொட்

54.

அவ்வுரை கேட்ட லோடும்
அரும்பு இளமுறுவல் நாற
மவ்வலந் தொடையல் மார்பன்
மகன்முகம் நோக்க லோடும்
வெவ்அரி ஏறு போல
விடைஎன எழுந்து சென்றான்
தெவ்அடு நாஞ்சில் செங்கைச்
செல்வனும் மருங்கு சேர

---

பிற் குலவும் - மதர்த்துத்திரியும்; ஏழுஎருதின் - ஏழுகாளைகளின், கொற்றத்து ஆற்றலை - வெற்றிவலிமையை; அடக்கி - கீழ்ப் படுத்தி; என்றன் - எனது; அரும்பெறல் புதல்விதன்னை - பெற லரும் மகளை; மாற்றருந்தகைசால் - மாற்றற்கரிய தகுதிபொருந் திய; நின்தன மகற்கு - உன்மகனுக்கு; அணிமணம் நன்கு ஆற்றி - அழகிய திருமணம் நன்குபுரிந்து; தேற்றரவு எய்துமாறு என் - இடமடையும் படி எனது; சிந்தனை - கவலையை; தவிர்த்தி என் றான் - போக்கியருள் என்றனன்;

54. அவ்வுரை கேட்டலோடும் - அந்த வார்த்தைகள் கேட் டதும்; அரும்பு இள முறுவல்நாற - புன்னகைமலர; மவ்வலந் தொடையல் மார்பன்-முல்லை மாலை வேய்ந்த மார்பினன், நந்த கோபன்; மகன் முகம் - புதல்வன் திருமுகத்தை; நோக்கலோடும்- பார்க்கவும்; வெவ்வரியேறு போல - சினமிக்க ஆண்சிங்கம் போல விடை என எழுந்து - காளைபோலநிமிர்ந்து; தெவ்வடு - பகைவர் களை அழிக்கும்; நாஞ்சில் செங்கைச் செல்வன் - சிவந்த கரத் தில்; கலப்பையைத் தாங்கும் பலராமனும் மருங்கு சேர-பக்கலில் வர; சென்றான் - போனான்;

கோட்டுடைக் குன்றம் என்ன
　　குலவும் ஏழ்எருதின் பாங்கர்
வீட்டுடைத் தலைவன் ஆங்கண்
　　மேவலும் வெகுளி பொங்கி
ஊட்டுஅரக்கு அனைய செங்கண்
　　உதிரநீர் ஒழுகப் பாய்ந்து
வேட்டையிற் கலைந்த தீவாய்
　　வேங்கையின் உரப்பிற்று அம்மா

55.

பொருப்புஎன உருமோடு ஒத்த
　　புயல்எனப் புவனம் காயும்
நெருப்புஎன விடைகள் ஏழும்
　　நேர்பொரு நீர்மை நோக்கி
மருப்புஉடைக் களிற்றுப் பாகன்
　　வயிரவாள் என்ன வேக
மருத்துஎன வருணம் என்ன
　　மலைந்தனன் மழைக்கன்று அன்னான்

---

55. கோட்டுடைக்குன்றம் என்ன - கொம்புகளை உடைய மலைபோன்று ; குலவும் - விளங்கும் ; ஏழெருதின்பாங்கர் - ஏழு காளைகளின்பக்கம் ; வீட்டுடைத்தலைவன் - பரமபதத்தின் தலைவன் கண்ணன்; மேவலும் - அணுகவும்; வெகுளிபொங்கி - மிகுந்த சினம் கொண்டு ; ஊட்டரக்கு அனைய - செவ்வரக்குத் தீட்டியது போன்ற; செங்கண்- சிவந்த விழிகளில்; உதிரநீர் ஒழுகப்பாய்ந்து- குருதிசொரிய ; வேட்டையிற் கலைந்த - வேட்டையாடுகை யில் கவனம் கலைக்கப் பெற்ற ; தீவாய் வேங்கையின் - தீச்சொரியும் வேங்கைப்புலி போல ; பாய்ந்து - தாவி ; உரப்பிற்று - உங்காரம் செய்தன ; அம்மா- அசை ;

56. பொருப்பென - மலைபோல ; உருமோடு ஒத்தபுயல்

57.

வால்பிடித்து எற்றும் பாரில்
வளர்இளம் கமுகம் அன்ன
கால்பிடித்து எற்றும் கையால்
கார்இரும் பனைய கோட்டு
வேல்பிடித்து எற்றும் காலால்
மிதித்திடும் வெருவக் கண்டோர்
மேல்எழப் பற்றிச் சுற்றி
விண்இடை வீசும் அன்றே

---

என- இடியோடு கூடிய மேகம் போல ; புவனம் காயும் - பூமியை எரிக்கும் ; நெருப்பென - தீயைப்போல ; விடைகள் ஏழும் - ஏழு காளைகளும் ; நேர்பொரு - எதிரே சண்டை செய்யும் ; தீர்மை நோக்கி - தன்மைகண்டு ; மருப்புடைக் களிற்றுப்பாகன் - தந்தமுடைய ஆண்யானையின் மாவுத்தன் ; வயிரவாள் என்ன - வயிரம்பதித்த உறுதியான வாள்போல ; வேக மருத்தென - புயல் காற்றுப் போல ; வருணம் என்ன - யானைபோல ; மலைத்தனன் மழைக்கன்றன்னான் - இளங்கார் மேகம் அனைய கண்ணன் போரிட்டான் ;

57. வால்பிடித்து எற்றும் பாரில் - பூமியில் வாலைப்பிடித்துச் சுழற்றி அடிக்கும் ; வளர் இளங்கமுகம்அன்ன-உயர்ந்துவளரும் பாக்குமரமனைய; கால்பிடித்தெற்றும் - கால்களைப் பற்றி அடிக்கும்; கையால் - கைகளால் ; கார் இரும்பனைய கோட்டு வேல் பிடித்து எற்றும் - கரிய இரும்பாலாகியவேல் போன்ற கொம்புகளைப்பற்றி வீசும்; காலால் மிதித்திடும்- கால்களால் துவைக்கும்; வெருவக் கண்டோர் - காண்போர் அஞ்ச ; மேல்எழப்பற்றி - மேலே எழும்படித் தூக்கி ; சுற்றி - சுழற்றி ; விண்ணிடை - வானில் ; வீசும் -எறியும் ; அன்றே-அசை ;

**58.**

எழுவகை உலகம் பூத்தான்
　　எழுவகை மரங்கள் சாய்த்தான்
எழுவகைக் கொண்டல் மாரி
　　எழுவரை கொண்டு காத்தான்
எழுவகைக் கடல்நீர் உண்டான்
　　எழுசின வாளி ஒன்றால்
எழுவகை விடைகள் அட்டான்
　　என்றனர் இமையோர் எல்லாம்

**59.**

உருவம் ஏழாகி யன்றி
　　ஒருப்பதற்கு ஒல்லாது என்பார்
பருவமும் ஏழே என்பார்
　　பாக்கியம் பலித்தது என்பார்
கருமுகில் வண்ணன் என்பார்
　　கண்கள் வாய்கமலம் என்பார்
திருமறு மார்பன் என்பார்
　　திருநகர்த் தெரிவை நல்லார்

---

58. எழுவகை உலகம் பூத்தான் - ஏழுவகையான உலகங்களையும் நாபிக் கமலத்துத் தோன்றிய பிரமன் படைத்தவன்; எழுவகை மரங்கள் சாய்த்தான் - இராமாவதாரத்தில் ஏழு மராமரங்களைச் சாய்த்தவன் ; எழுவகைக்கொண்டல் மாரி - சப்த மேகங்களின் மழையை; எழுவரைகொண்டு - மேலே உயர்ந்து எழும் கோவர்த்தன மலையால் ; காத்தான் - தடுத்தவன் : எழுவகைக் கடல்நீர் உண்டான் - சப்த சாகரநீரையும் உண்டவன் ; எழுசின வாளி ஒன்றால்-கோபித்துச் சீறிஎழும் அம்பு ஒன்றினால்; எழுவகை - ஏழுதரமுள்ள ; விடைகள் அட்டான் - காளைகளைக் கொன்றான் ; என்றனர் இமையோர் எல்லாம் - என்று தேவர்கள் அனைவரும் கூறினர் ; எழுஎன்ற சொல் ஏழு இடத்தில் வந்து இந்தப்பாடலுக்கு மெருகூட்டுகின்றது ;

59. உருவம் ஏழாகியன்றி - ஏழுவடிவங்களெடுக்காமல் ;

60.

குறுநகைப் பவளச் செவ்வாய்க்
கோற்றொடி யசோதை யீன்ற
மறுவிலா மைந்தன் என்பார்
மாரவேள் இவனோ என்பார்
நறுநுதல் மூத்த மூரல்
நப்பினை தவமே என்பார்
எறுழ்வலி இச்சேய் செவ்வி
எங்ஙனம் மறப்பது என்பார்

**வேறு**

61.

இன்னணம் அந்நகர் இரைத்துப் பொங்கினர்
பன்னிடப் புன்னகைப் பரமன் பாந்தளின்
மன்னும் ஏழுஎருதினை அடக்கி மாமதம்
துன்னுபோ தகம்எனத் துலங்கி னான்அரோ

---

ஒருப்பதற்கு - சொல்வதற்கு ; ஒல்லாது என்பார் - இயலாது என்பர் ; பருவமும் ஏழே என்பார் - இவன் வயதும் ஏழுதான் ; என்பர் ; பாக்கியம் பலித்தது என்பார் - பேறு நிறைவேறிற்று என்பர் ; கருமுகில் வண்ணன் என்பார் - கார்மேக நிறத்தன் என்பர் ; கண்கள் வாய் - திருவிழிகளும் திருவாயும் ; கமலம் என்பார் - தாமரை மலர் என்பார்கள் ; திருநகர்த் தெரிவே நல்லார் - அழகிய மிதிலாநகரப் பெண் - நல்லார்கள் ; திருமறுமார்பன் என்பார்- இலக்குமியும், மச்சமும் பொலியும் மார்பினன் என்பார்கள்; திருநகர்த் தெரிவை நல்லார் என்ற தொடரை, என்பார் என்பதுடன் கூட்டுக ;

60. குறுநகைப் பவளச் செவ்வாய்க் கோற்றொடி - புன் சிரிப்பும், பவளச் செவ்வாயும் கூடிய அழகிய வளையலணிந்த ; யசோதையீன்ற - அசோதாதேவி பெற்ற ; மறுவிலாமைந்தன் என்பார் - குற்றங்களற்ற புதல்வன் என்பார்கள் ; மாரவேள் இவனோ என்பார் - மன்மதன் தானோ இவன் என்பார்கள் ; நறுநுதல் மூத்த மூரல் - மணங்கமழ் நெற்றியும் முத்தனைய பற்களுமுடைய ; நப்பினை - நப்பின்னை புரிந்த ; தவமே என்பார் - தவத்தின் பலன் என்பார்கள் ; எறும் வலி இச்சேய் - தூண்போன்ற வலிமை உடைய இச்சிறுவன் ; செவ்வி - அழகை ; எங்ஙனம் மறப்பது என்பார் - எவ்விதம் மறக்க முடியும் என்பார்கள் ;

61. இன்னணம் - இவ்வாறு ; அந்நகர் - அந்த நகரமக்கள் ;

62\.

கண்டனன் கும்பகன் தானும் கண்களால்
அண்டர் நாயகன் இவன்ஆகு மால்எனக்
கொண்டனன் களிப்புஉளம் கோது அற்றோம்என
விண்டனன் இறைஞ்சினன் நிலத்தில்
வீழ்ந்துஅரோ

63\.

பல்இயம் முழங்கிடப் பரவை ஆர்ப்புஎனச்
சில்லரிப் பாண்டிலும் முழங்கத் தேன்இசை
அல்லியங் கூத்துடன் ஆடி னார்பலர்
மல்லல் வேய்ங்குழல்இசை வடித்துப் பாடினார்

---

இரைத்து - ஆரவாரம் செய்து ; பொங்கினர் - எழுச்சியுற்று ; பன்னிட - கூறவும் ; புன்னகைப்பரமன் - புன்சிரிப்புக் கொண்ட கடவுட்கண்ணன் ; பாந்தளின் - பாம்புபோல ; மன்னும் ஏழுஎரு இனை - விளங்கும் ஏழுகாளைகளை : அடக்கி - அடங்கும் படி கொன்று; மாமதம் துன்னு-பெருமதம் கொண்டிருக்கும் ; போதக மென-யானைபோல; துலங்கினான்-விளங்கினான்; அரோ-அசை

62\. கண்டனன் கும்பகன் தானும் கண்களால் - கும்பகன் தன் விழிகளால் நோக்கினான் , அண்டர் நாயகனிவனாகும் - தேவ தேவன் இவனாவான்; என - என்று; கொண்டனன் களிப்பு-மகிழ்ச்சியடைந்தான் ; உளம் கோது அற்றோம் என - மனக் கவலை நீங்கினோம் என்று ; விண்டனன் - கூறினான் , இறைஞ் சினன் நிலத்தில் வீழ்ந்து - பூமியில் சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்தனன் ; அரோ-அசை ;

63 பல்லியம் முழங்கிட - பலவகை வாத்தியங்கள் முழங்க வும் ; பரவை ஆர்ப்பென - கடல் ஆரவார ஒலிபோல ; சில்லரிப் பாண்டிலும் முழங்க - சிறிய பருக்கைக் கற்களுடைய பாண்டில் என்ற இசைக்கருவி ஒலிக்க ; தேன் இசை - இனிமை பொருந்திய ; அல்லியங் கூத்துடன் - ஆய்ச்சியர் குரவை ஆட்டத்துடன் ; ஆடி னார் பலர் - பலர் நடனமாடினர் ; மல்லல் வேய்ங்குழல் - வள மான வேணுவில் ; இசைவடித்து - கானம் பொழிந்து; பாடினார்- பாடினார்கள்; பலர் என்பதை ஆடினார், பாடினார், என மத்திம தீபமாகக் கொள்க ;

64.

பூரண பொற்குடம் அமைத்துப் பொன்மணித்
தோரணம் நாட்டினர் தூபம் மூட்டினர்
ஆரணம் முழக்கினர் அந்த ணாளர்கள்
நாரணன் இவன்என நாடும் தன்மையார்

65.

சந்திரன் நிகர்எனத் தவளத் தூண்இடைப்
பந்தரும் படுத்தனர் பவளம் முத்துடன்
தந்திடைக் கோத்திடை தயங்க நாற்றினர்
இந்திரன் நகர்என எண்ணு மாறுஅரோ

66.

மஞ்சனம் ஆட்டினர் மலர்ந்த பூந்துழாய்
அஞ்சனப் புயலொடும் அமிர்தின் சாயல்அவ்
வஞ்சியை மணிஅணி வனைந்து வாழ்த்தினார்
பஞ்சணி பதத்தியர் பல்லாண்டு பாடினார்

---

61. பூரண பொற்குடம் அமைத்து - பூரண கும்பம் பொன்னால் அமைத்து ; பொன்மணித் தோரணம் நாட்டினர் - பொன்னும் மணியும் பொருந்திய கோபுரமுன்வாயில் அமைத்தனர் ; தூபம் மூட்டினர் - சந்தனம் அகில் முதலியவற்றால் நறும் புகை எழச்செய்தனர் ; அந்தணாளர்கள் - வேதியர்கள்; ஆரணம் முழக்கினர் - வேத கோஷமிட்டனர் ; நாரணன் இவன்என நாடும் தன்மையார் - இவனே நாராயணன் என உணர்ந்த தன்மையினர் ;

65. சந்திரன் நிகர் எனத் தவளத் தூணிடை - திங்களை ஒத்த வெண்மையான கம்பங்களுக்குஇடையே ; பந்தரும் படுத்தனர் - பந்தல் போட்டார்கள் ; பவளம் முத்துடன் - பவளங்களை நல்முத்துக்களோடு ; தந்திடைக் கோத்து - நூலில் கோத்து ; இடை தயங்க - நடுவில் விளங்கும்படி ; இந்திரன்நகர் என - இந்திரப் பட்டினம், அமராவதி என்று ; எண்ணுமாறு - நினைக்கும் வண்ணம் ; நாற்றினர் - தொங்கவிட்டனர் ; அரோ - அசை ;

66. மலர்ந்த பூந்துழாய் அஞ்சனப் புயலொடும் - மலர்ந்த துளசிமாலையணிந்த கருமேக மனைய கண்ணனொடு ; அமிர்தின்

67.

பங்கயம் மலர்ந்துஒரு பவள வல்லியோடு
இங்கிதம் அமைந்துஒரு மங்குல் ஏர்பெறத்
தங்குமோர் விமானமேல் சார்ந்து வைகல்போல்
நங்கை தன்னுடன்மண அறையை நண்ணினான்

**வேறு**

**நப்பின்னைப் பிராட்டியார் கண்ணன் திருமணம்**

68.

அனல்வளர்த்தனர் ஆகுதி சொரிந்தனர் ஆய்ந்து
வினைஅறுத்துயர் வேதியர் மந்திர விதியால்
புனைநறுந்துழாய் தளவொடு நாறிய புனிதன்
வனிதைதன்கரம் பிடித்தனன் மங்கலம் ஆர்ப்ப

---

சாயல் அவ்வஞ்சியை - இன்னமுதம் போன்ற சாயலுடைய அந்தக் கொடியனைய நப்பின்னையை ; மஞ்சனம் ஆட்டினர் - மங்கள நீராட்டினார்கள் ; மணியணிவனைந்து - இரத்தின ஆபரணங்கள் அணிவித்து ; பஞ்சணி பதத்தியர் - செம்பஞ்சுக்குழம்பணிந்த திரு வடியுடைய பெண்கள் ; பல்லாண்டு பாடினார் - பல ஆண்டுகள் வாழ்க என்றனர் ; வாழ்த்தினார் - வாழ்த்துப் பாடினார்கள் ;

67. பங்கயம் மலர்ந்து - தாமரை விரித்து ; ஒருபவள வல்லி யோடு - ஒப்பற்ற பவளக் கொடியுடன் ; இங்கிதம் அமைந்து - இனிமை பொருந்தி ; ஒருமங்குல் ஏர் பெறத் தங்கும் - ஒப்பற்ற ஆகாயம் போல விளங்கும் ; ஓர் விமான மேல் சார்ந்து - மேற்கட்டு மேலேபொருந்த ; வைகல்போல் - விளங்க இருப்பது ஒப்ப ; நங்கை தன்னுடன் - நப்பின்னை நங்கையுடன் ; மண அறையை - திரு மண அரங்கை ; நண்ணினான் - சார்ந்தனன் ;

68. மந்திர விதியால் - வேதமந்திர நெறிப்படி ; ஆய்ந்து - தேர்ந்து ; வினை அறுத்து - வினைகள் ஒழித்து ; உயர்வேதியர் - உயர்ந்த அந்தணர்கள் ; அனல்வளர்த்தனர் - தீவளர்த்து ; ஆகுதி சொரிந்தனர் - நெய்சொரிந்தனர் ; மங்கலம் ஆர்ப்ப - மங்கல இசை முழங்க ; புனைநறுந்துழாய்தள வொடு நாறிய புனிதன் - தனி

### அக்னி வலம் வந்து அம்மி மிதித்து அருந்ததி கண்டனர்

69.

தீவலங்கொடு சென்றனர் நெற்பொறி சிதறி
மாவலந்தரும் அந்தணர் ஆசிகள் வகுத்தார்
நாவலங்கொடு மங்கலம் பாடினர் நல்லார்
பூவலங்கொடு பொழிந்தனர் கற்பகப் புலவர்

### வேறு

70.

விலங்கலில் அம்மிதாள் மிதித்து மேதகு
கலங்கலில் அருந்ததி கண்டு கைதொழுது
இலங்குஒளி முனிவர்தாள் இறைஞ்சி ஏத்தினான்
பொலங்குழை மயிலொடு பூவைப் பொற்பினான்

---

யுடன் முல்லை மாலைமணக்கப் புனைந்த பரிசுத்தன் கண்ணன் வனிதை தன்கரம் பிடித்தனன்-நப்பின்னை திருக்கரம்பற்றினான் (பாணிக்கிரகணம்) ;

69. தீவலங்கொடு சென்றனர் - அக்கினியை வலம் வந்தனர் ; நெற்பொறிசிதறி - நெல்லின் பொறிகள். தூவி ; மாவலந்தரும் - பெரிய நன்மைகளை அளிக்கும் ; அந்தணர் - வேதியர்கள்; ஆசிகள் வகுத்தார் - ஆசீர்வசனம் கூறினர் ; நல்லார் - பெண்கள்; நாவலங்கொடு - வாக்குவன்மையால்; மங்கலம் பாடினர் - வாழ்த்துப் பாடினர் ; கற்பகப் புலவர் - தேவர்கள் ; பூவலங்கொடு பொழிந்தனர் - மிகுதியாகப் பூமழை சொரிந்தனர் ;

70. விலங்கலில் அம்மி - மாற்றமில்லாத அம்மிக் கல்லை ; தாள் மிதித்து- காலால் மிதித்து ; மேதகு-மேலான தகுதிபெற்ற ; கலங்கலில் - சலனமற்ற ; அருந்ததிகண்டு - அருந்ததி மீனைக் கண்டு ; கைதொழுது-கை கூப்பிவணங்கி; இலங்குஒளி - ஞானஒளி வீசும்; முனிவர்தாளிறைஞ்சி - முனிவர்கள் திருவடிகளில் பணிந்து தொழுது ; பொலங்குழை மயிலொடு - தங்கக்குழையணிந்த நப்பின்னையுடன்; பூவைப்பொற்பினான் - காயாம்பூமேனியான்; ஏத்தினான் - துதித்தான் ;

வேறு

71.

ஏறுஉகைத்தவன் தனுவினை இறுத்தலில்
எழிலால்
சேறுடைப்பணை மிதிலையில் தோன்றிய
திறத்தால்
கூறுபெற்றஅக் கும்பகன் கோதை
சானகியே
வீறுபெற்றஇக் கண்ணனும் இராமனே
விளம்பில்

வேறு

72.

கொந்தவிழ் முல்லை மாலைக்
கும்பகன் நந்த கோனை
வந்தனை புரிந்து போற்றி
வரிசைகள் பலவும் நல்கி
எம்தமர் ஆக நின்னை
எய்திடப் பெற்ற பேறு
முந்தைநல் வினையே என்ன
மொழிந்தனன் முகம னோடும்

---

71. ஏறுஉகைத்தவன்-இடபவாகனன் சிவன்; தனுவினை - வில்லை; இறுத்தலில் - ஒடித்ததால்; எழிலால் - அழகால்; சேறுடைப்பணை - சேற்றுவளங் கூர்பண்ணை உடைய; மிதிலையில்-மிதிலாபுரியில்; தோன்றிய திறத்தால் - பிறந்த தன்மையால்; கூறுபெற்ற - பங்குபெற்ற; அக்கும்பகன் கோதை - அந்தக் கும்பகன்மகள் நப்பின்னை; சானகியே - சீதையாம்; விளம்பில்-கூறினால்; வீறுபெற்ற இக்கண்ணன் - வீரம்மிக்க இந்தக்கண்ணன்; ராமனே - ஸ்ரீ இராமபிரானே;

72. கொந்தவிழ்முல்லை மாலைக்கும்பகன் - முல்லைமலர் மாலை புனைந்த கும்பகன்; நந்தகோனை - நந்தகோபனை; வந்தனைபுரிந்து - நமஸ்காரம் செய்து; வரிசைகள் பலவும் நல்கி-பலவகையான பரிசுகள் அளித்து; போற்றி-துதித்து; எந்தமராக-சம்பந்தியாக; நின்னை எய்திட-உன்னை அடைய; பெற்ற பேறு-வாய்த்த பாக்கியம்; முந்தைநல்வினையே என்ன - பூர்வ சன்மப் புண்ணியம் என்று; முகமனோடும் மொழிந்தனன் - உபசாரமுடன் கூறினான்;

73.

கோதிலாக் குணத்தான் ஆன
 கும்பகன் கூறக் கேட்டான்
ஆதரம் பெருகி நந்தன்
 அன்னவன் விடைபெற்று அம்தண்
தாதுலாம் கோதை யோடும்
 தமரொடும் தனைய ரோடும்
போதுஅளி முரலும் முல்லைப்
 புலத்திடைப் புக்கான் அன்றே

74.

புக்கபின் புழைக்கை நால்வாய்ப்
 போதகம் அனையா னோடும்
மிக்கநூல் கேள்வி சான்ற
 விறல்புனை நந்த கோபன்
எக்கணும் சீர்த்தி ஓங்க
 இளநிலா மதியம் அன்ன
மைக்கயல் விழிய கோதை
 தன்னொடும் வாழும் நாளில்

---

73. கோதிலா - குற்றமற்ற ; குணத்தனான - நற்குண முடைய ; கும்பகன் கூற - கும்பகனுரைக்க; கேட்டான் - கேட்டு ; ஆதரம் பெருகி - அன்பு அதிகரிக்க ; நந்தன் - நந்தகோபன் ; அன்னவன்விடைபெற்று - அவன்பால் விடைகொண்டு ; அம்தண் தாதுலாம் - அழகிய குளிர்ந்த மலர் சூடிய ; கோதையோடும் - நப்பின்னையுடன் ; தமரொடும் - சுற்றத்தாருடன் ; தனையரோடும் - புதல்வர்களுடன்; போதளிமுரலும் முல்லைப் புலத்திடை - மலரில் வண்டுகள் பாடும் முல்லைநிலமாம் பிருந்தாவனம் புக்கான் அன்றே - அன்றைக்குச் சௌகரியமாகப் போய்ச் சேர்ந்தான் ;

74. புக்கபின் - பிருந்தாவனம் சென்ற பிறகு ; புழைக்கை நால்வாய்ப் போதக மனையானோடும் - துதிக்கையுடைய யானை

**கமலை, நீளை, இராதை, பூரணை, இந்துவல்லி ஆகியவர்களையும் கண்ணன் கடிமணம் புரிந்தது**

75.

கயல்விழிக் கமலை நீளை
கவினுறும் இராதை வாசப்
புயல்நிகர் அளக வல்லி
பூரணை இந்து வல்லி
வெயில்மணிச் சோதி ஆதி
மெல்லிய லாரை வேட்டான்
மயல்விளைத்து உலகு மூன்றும்
வாய்இடைக் கொள்ளும் மைந்தன்

---

**நப்பின்னைப் பிராட்டியார் திருமணம் உரைத்த அத்தியாயம் முற்றும்.**

---

போன்றவனுடன் ; மிக்கநூற்கேள்வி சான்ற-மிகுந்த நூல் கேள்வி ஞானம்மிக்க ; விறல்புனை - வலிமை பொருந்திய ; நந்தகோபன் - நந்தகோபமன்னன் ; எக்கணும் - எவ்விடத்தும் ; சீர்த்தியோங்க - புகழ் ஓங்கி உயர; இளநிலா மதியம்அன்ன-குளிர்ந்த நிலவு பொழியும் சந்திரன் போன்ற ; மைக்கயல் விழி-மை தீற்றிய மீன் கண்ணினள் ; யசோதை தன்னொடும் - அசோதையுடன்; வாழும்நாளில்- வாழ்கின்ற காலத்தில் ;

75. கயல்விழிக்கமலை - மீனனைய விழியாள் கமலை ; நீளை - நீளாதேவி ; கவினுறும்ராதை - அழகுமிக்க இராதை ; வாசப்புயல்நிகர் - வாசம் வீசும் மேகமனைய ; அளகவல்லி - கூந்தற்கொடியனையாள் ; பூரணை - பூர்ணாதேவி ; இந்துவல்லி - இந்துவல்லி என்பாள் ; வெயில் மணிச் சோதி - மணி ஒளிச்சோதியாள் ; ஆதி - முதலிய ; மெல்லியலாரை - பெண்களை ; மயல் விளைத்து - மயக்கம் தந்து ; உலகுமூன்றும் - மூவுலகங்களையும் ; வாயிடைக் கொள்ளும் - வாயில் அடக்கும் ; மைந்தன்- இளைஞன் கண்ணன் ; வேட்டான் - திருமணம் புரிந்தான் ;